


ISSN: 2582–5518

# புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ அக்டோபர். 26, 2023 சென்னை & புதுக்கோட்டை 6 பக்கம் ❖ வரலாறு 9 ❖ இதழ் 23 ❖ ரூ.10

தமிழக அரசு ஊழியர்களுக்கு 4% அகவிலைப்படி உயர்வு; முதல்வர்

# அறிவிப்பு

## 16 லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள்; தமிழக அரசு

சென்னை, அக். 26–

அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு தற்போது வழங்கப்படும் 42 சதவீத அகவிலைப்படி, 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கப்படும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.



இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு : மக்கள் நலனுக்காக அரசு வகுக்கும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தும் அரும்பணியில், அரசோடு இணைந்து பணியாற்றும் அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாத்து வருகின்றது. முந்தைய அரசு விட்டுச் சென்ற கடும் நிதி நெருக்கடி மற்றும் கடன் சுமைக்கு இடையேயும், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் பல்வேறு கோரிக்கைகள் குறித்த வாக்குறுதிகளைப் படிப்படியாக நிறைவேற்ற முனைப்புடன் இந்த அரசு செயல்பட்டு வருகின்றது.

அவ்வகையில், அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் கோரிக்கையை முதல்வர் கனிவுடன் பரிசீலித்து, மத்திய அரசு பணியாளர்களுக்கு அகவிலைப்படி உயர்வை அறிவிக்கும் போதெல்லாம் உடனுக்குடன் தமிழக அரசும் அதை பின்பற்றி அரசு அலுவலர் மற்றும் ஆசிரியர்களுக்கும் அகவிலைப்படி உயர்வை செயல்படுத்தப்படும் என்று ஏற்கெனவே வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, தற்போது 42 சதவீதமாக உள்ள அகவிலைப்படியை 01.07.2023 முதல் 46 சதவீதமாக உயர்த்தி வழங்கிட உத்தரவிட்டுள்ளார்.

இந்த அகவிலைப்படி உயர்வால், சுமார் 16லட்சம் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவார்கள். இதனால் ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு 2546.16 கோடி ரூபாய் கூடுதல் செலவினம் ஏற்படும். எனினும், அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் நலன் கருதி இதற்கான கூடுதல் நிதியை அரசு ஒதுக்கீடு செய்யும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புதுக்கோட்டையில் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி புதிய பகுதிநேர அங்காடியினை திறந்து வைத்தார்

புதுக்கோட்டை, அக்.26–



புதுக்கோட்டை மாவட்டம் 9ஏ நத்தம்பண்ணை ஊராட்சி, அபிராமி நகரில், கூட்டுறவுத் துறையின் சார்பில், புதிய பகுதிநேர அங்காடியினை, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி நேற்று திறந்து வைத்து, குடும்ப அட்டைதாரர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் ஐ.சா. மெர்சிரம்யாதலைமையில் நடைபெற்றது, பின்னர் சட்டத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் பொதுமக்களின் நலனிற்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள், அந்தவகையில் கூட்டுறவுத் துறையின் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்கள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

அதன்படி இன்றையதினம், அபிராமி நகரில், புதிய பகுதிநேர அங்காடி திறந்து வைக்கப்பட்டது, புதுக்கோட்டை மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை கட்டுப்பாட்டில் உள்ள அர்பன்-19 அங்காடியிலிருந்து பிரிக்கப்பட்டுள்ள அபிராமி நகர் பகுதி நேர நியாய விலைக்கடையானது 185 குடும்ப அட்டைகளுடன் பிரதிவாரம் சனிக்கிழமை மட்டும் இயங்கும் வகையில் அபிராமி நகர் மக்களுக்காக பிரத்யேகமாக திறக்கப்பட்டுள்ளது.

இப்பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலைக்கடை திறப்பதினால் குடும்ப அட்டைதாரர்களுக்கு வெகு தூரம் சென்று பொருட்களை பெற்று வரும் நிலையில், குடும்ப அட்டைதாரர்களின் நேரமும், அலைச்சலும் குறையும். தாய் அங்காடியான அர்பன்-19 அங்காடியிலிருந்து அபிராமி நகர் சுமார் 2 கி.மீ தூரம் உள்ளதாலும், மழைக் காலங்களில் பொதுமக்கள் தங்களது அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு மிகவும் சிரமமாக இருந்து வந்த நிலையில் இனி அபிராமி நகர் மக்கள் தங்களுக்குத்தேவையான அத்தியாவசியப் பொருட்களை தங்கள் பகுதியிலேயே பெற்று கொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே இப்பகுதி பொதுமக்கள் அனைவரும் இதனை உரிய முறையில் பெற்று பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார், இந்நிகழ்ச்சியில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் வை.முத்துராஜா, முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் த.ஜெயலட்சுமி புதுக்கோட்டை நகர்மன்றத் தலைவர் திலகவதி செந்தில், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் கோ.இராஜேந்திர பிரசாத், நகர்மன்றத் துணைத் தலைவர் எம்.லியாகத்அலி, மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் ராமச்சந்திரன், துணைப் பதிவாளர் அப்துல்சலீம், கூட்டுறவு சார்பதிவாளர்கள் இந்திரா, நிஷாந்தி, அர்பன் மேலாளர் கிருஷ்ணகுமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

## முல்லைப்பெரியாறு அணையைக் கட்டிய பென்னிகுவிக் புகழ் ஓங்கட்டும்: அமைச்சர் உதயநிதி ஸ்டாலின்

தேனி, அக். 26–

முல்லைப்பெரியாறு அணையைக் கட்டிய பென்னிகுவிக் அவர்களின் புகழ் ஓங்கட்டும் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



தேனி மாவட்டத்தில் நடைபெற்ற பல்வேறு நிகழ்ச்சிகளில் தமிழக இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார். அதன்படி, தேனி மாவட்டம் லோயர் கேம்ப்பில் அமைக்கப்பட்டுள்ள பென்னிகுவிக் சிலைக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும் மணிமண்டபத்தையும் சுற்றி பார்த்தார்.

இது தொடர்பாக உதயநிதி ஸ்டாலின் தனது எக்ஸ் வலைத்தளத்தில், "முல்லைப்பெரியாறு அணையைக் கட்டி தேனி மதுரை உள்ளிட்ட ஐந்து மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்த கர்னல் ஜான் பென்னிகுவிக் அவர்களுக்கு தேனி லோயர்கேம்பில் அமைக்கப்பட்டுள்ள நினைவு மண்டபத்தில், அவருடைய திருவுருவச்சிலைக்கு அணிவித்து மரியாதை செய்தோம்.

இங்கிலாந்தில் பிறந்திருந்தாலும் இங்குள்ள மக்களின் நலனுக்காக தன் சொத்துகளை விற்று முல்லைப்பெரியாறு அணையைக் கட்டிய பென்னிகுவிக் அவர்களின் புகழ் ஓங்கட்டும்," எனப் பதிவிட்டுள்ளார்.

தொடர்ந்து, முத்துதேவன்பட்டியில் உள்ள வீட்டுவசதி வாரிய சமுதாய கூடத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கிய அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கம்பத்தில் நடைபெற்ற விழாவில் திமுக மூத்த நிர்வாகிகள் 1000 பேருக்கு ரூ.10 ஆயிரம் வீதம் பொற்கிழி வழங்கினார்.

## "சங்கரய்யாவுக்கு கவுரவ டாக்டர் பட்டம் வழங்க ஆளுநர் ஒப்புதல் தர வேண்டும்" அமைச்சர் பொன்முடி மீண்டும் வலியுறுத்தல்

சென்னை, அக். 26–

தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது உண்மையிலேயே ஆளுநருக்கு அக்கறை இருந்தால், கம்யூனிஸ்ட் மூத்த தலைவர் சங்கரய்யாவுக்கு டாக்டர் பட்டம் வழங்க ஒப்புதல் அளிக்க வேண்டும் என உயர்கல்வித்துறை அமைச்சர் பொன்முடி வலியுறுத்தியுள்ளார்.



ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும் ஆளும் திமுக அரசுக்கும் இடையே தொடர்ந்து வார்த்தை மோதல்கள் இருந்து வருகின்றன. இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்பு மருது சகோதரர்கள் நிகழ்ச்சியில் பேசிய ஆளுநர் ஆர்.என். ரவி, சுதந்திர போராட்ட வீரர்களை தமிழக அரசு மறந்துவிட்டதாகக் குற்றம் சாட்டினார். இதையடுத்து முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட திமுக தலைவர்கள் பதிலடி கொடுத்திருந்தனர்.

இந்தநிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "தமிழகத்தின் சுதந்திரப் போராட்ட வீரர்களை திமுக நினைவுகூற தவறியதாக, தமிழகத்தின் சுதந்திர போராட்ட வரலாறு அனைத்தும் தெரிந்தவர்போல, ஆளுநர் ஆர்.என்.ரவி கருத்து கூறியிருக்கிறார். அதற்கான பதிலை, திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் டி.ஆர்.பாலு ஏற்கனவே தெரிவித்துள்ளார்.

தமிழக சுதந்திரப் போராட்ட வீரர்கள் மேல் அக்கறை உள்ளவர் போல பேசுகிற தமிழக ஆளுநர், ஊடகங்கள் வழியாக நான் அளிக்கும் பேட்டியை நிச்சயமாக கேட்பார் என்று கருதுகிறேன். ஆளுநருக்கு உண்மையிலேயே தமிழகத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர்களின் மீது அக்கறை இருக்குமானால் மதுரை பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழு மற்றும் ஆட்சிமன்ற பேரவைக்குழு இரண்டும் சேர்ந்து, ஆட்சிக்குழுவின் மூலமாக 18.8.2023 அன்றும், ஆட்சிமன்ற பேரவைக்குழுவில் 20.9.2023 லும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆளுநருக்கு ஒரு பரிந்துரை அனுப்பிவைக்கப்பட்டது. அது அந்த பல்கலைக்கழகத்தின் சட்ட விதியின்படி, ஆட்சிமன்ற பேரவைக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால், கவுரவ டாக்டர் பட்டம் வழங்க வேண்டும். ஆனால், அதற்கு வேந்தரின் கையெழுத்தும் தேவை என சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கரய்யா மிகச்சிறந்த சுதந்திர போராட்ட வீரர். கல்லூரி படிப்பையே இழந்து 9 ஆண்டுகள் சிறையில் வாடி இருக்கிறார். அதோடு இரண்டு ஆண்டுகள் தலைமறைவாக இருந்து போராடியவர். அவருடைய வரலாற்றை பார்த்து தெரிந்து கொண்டாவது ஆளுநர், இதில் கையெழுத்திட வேண்டும்" என்று உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி தெரிவித்திருக்கிறார்.

## தமிழக வளர்ச்சிக்கு ஆளுநர் முட்டுக்கட்டை போடுகிறார் அதை முறியடித்து தமிழகம் செயல்படும் அமைச்சர் சேகர்பாபு

சென்னை, அக். 26–

தமிழக வளர்ச்சிக்கு ஆளுநர் முட்டுக்கட்டை போடுகிறார். அதை முறியடித்து தமிழகம் செயல்படும் என இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



இது குறித்து செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர் கூறியதாவது, தி.மு.க ஆட்சியில் 6 ராஜ கோபுரங்கள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளது. 13 திருத்தேர்கள் மராமத்து பணிகளுக்கு ரூ.7 கோடியே 58 லட்சரூபாய் செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருத்தேர்கள் புதுப்பிக்கப்பட்டு தற்போது வீதி உலா நடைபெற்று வருகிறது.

சென்னை கோயம்பேடு பகுதியில் உள்ள குறுங்காலீஸ்வரர் கோயிலுக்கு ரூ.85 லட்சம் செலவில் 5 இராஜகோபுரங்கள் கட்டுவதற்கும், ரூ.53 லட்சத்தில் புதிய மரத்தேர், அன்னதான கூடம் ரூ. 49 லட்சம் செலவில் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டு உள்ளது. தி.மு.க ஆட்சியில் இதுவரை 1093 கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்று உள்ளது. சுமார் 5472 கோடி ரூபாய் மதிப்புள்ள 5820 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு உள்ளது. அறநிலையத்துறையில் இதுவரை அமைந்த ஆட்சியில் இல்லாத வகையில் தற்போதைய ஆட்சியில் திருப்பணிகள், ஆக்கிரமிப்பு நிலம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும் ரூ.600 கோடி உபதாரர்களிடம் இருந்து பெறப்பட்டு உள்ளது. தி.மு.க ஆட்சி ஆன்மீக ஆட்சியாகத் திகழ்ந்து வருகிறது. இந்நிலையில் தமிழக வளர்ச்சிக்கு ஆளுநர் முட்டுக்கட்டை போடுகிறார். அதை முறியடித்து தமிழகம் செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார். தமிழக ஆளுநராக செயல்படாமல் ஆர்.என்.ரவி ஆர்.எஸ்.எஸ் மற்றும் பாஜக மாநிலத்தலைவராக அவர்களுடைய கொள்கைகளை பின்பற்றி செயல்படுகிறார். மனிதர்களை பிரித்தாள்வது, ஜாதிமத வேறுபாடுகள் பார்ப்பது போன்ற பணிகளில் ஈடுபடுவதை ஆளுநர் மேற்கொண்டுள்ளார். பொன்.மாணிக்கவேல் பணியில் இருந்தபோது அப்பாவி மக்கள் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

## நவம்பர் 4ம் தேதி ஹெல்த் வாக் எனப்படும் "நடப்போம் நலம் பெறுவோம்" என்ற திட்டம் தொடக்கம் அமைச்சர் மா.சுப்ரமணியன்

சென்னை, அக். 26–

நவம்பர் 4ம் தேதி ஹெல்த் வாக் எனப்படும் "நடப்போம் நலம் பெறுவோம்" என்ற திட்டம் தொடங்கப்பட உள்ளதாக அமைச்சர் மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.



சென்னையில் 'ஹெல்த் வாக்' சாலையை ஆய்வு செய்த பின்னர் மருத்துவத்துறை மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது பேசிய அவர், நவ.4ம் தேதி 38 மாவட்டங்களில் 8 கிலோ மீட்டர் கொண்ட 'ஹெல்த் வாக் சாலை' தொடங்கப்படவுள்ளது. இந்த திட்டத்தை சென்னை பெசன்ட் நகரில் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். மற்ற மாவட்டங்களுக்கு முதலமைச்சர் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைக்க உள்ளார். நடைபயிற்சி மேற்கொள்பவர்கள் வசதிக்காக காலை 5.00 முதல் 8.00 மணி வரை பெசன்ட் நகர் அவன்யூ பகுதி சாலைகளில் கனரக வாகனங்கள் வந்து செல்ல அனுமதி இல்லை. மாதந்தோறும் முதல் ஞாயிற்றுக்கிழமை சுகாதாரத் துறையின் சார்பில் ஹெல்த் வாக் நடைபெறும் இடங்களில் மருத்துவ முகாமும் நடைபெற உள்ளது.

கொரோனா காலத்திற்குப் பிறகு சமீபகாலமாக இளம் வயதினர் உட்பட பலருக்கும் மாரடைப்பு அதிகரித்து வருகிறது. மாரடைப்பால் ஏற்படும் உயிரிழப்புகள் அதிகரித்துள்ள நிலையில் நடைபயிற்சியும், உடற்பயிற்சியும் அவசியம். கடந்த 10 மாதங்களில் 5,600 பேர் டெங்குவால் பாதிக்கப்பட்டுள்ளனர்; 5 பேர் இறந்துள்ளனர். வரும் நவம்பர், டிசம்பர் மாதங்களில் டெங்கு பாதிப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது. டெங்கு காய்ச்சல் காரணமாக 490 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அக் 29ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதி வரை மழைக்கால சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. சென்னையில் முத்துலட்சுமி ரெட்டி பார்க்-ல் இருந்து பெசன்ட் நகர் பீச் வழியாக அன்னை வேளாங்கன்னி சர்ச் வழியாக மீண்டும் முத்துலட்சுமி ரெட்டி பார்க் வரை ஹெல்த் வாக் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இந்த சாலையின் இருபுறங்களிலும் மரங்கள் நடப்பட்டுள்ளது. இதைத்தவிர, விழிப்புணர்வு பதாகைகளும் வைக்கப்பட்டுள்ளன. முதல்வர் மு.க.ஸ்டாலின் வரும் நவம்பர் 4-ம் தேதி இந்த திட்டத்தை தொடங்கி வைக்கின்றார். அன்று காலை 6.00 மணிக்கு தொடங்கி வைத்து அவர் நடைப்பயிற்சியும் மேற்கொள்ளவுள்ளார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## "நாட்டின் பண்பாட்டைப் பாதுகாப்பதில் ஆர்எஸ்எஸ் பங்கு அளப்பரியது" பாடகர் சங்கர் மகாதேவன் புகழாரம்



நாக்பூர்:அக்.26,அகண்ட பாரதம் கொள்கையை பாதுகாப்பதிலும், நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதிலும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் பங்கு அளப்பரியது என்று பாடகர் சங்கர் மகாதேவன் புகழ்ந்துள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் வருடாந்திர விஜயதசமிகொண்டாட்ட நிகழ்வு நாக்பூரில் நடைபெற்றது.இதில்பிரபல பாடகர்சங்கர்மகாதேவன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். இந்த நிகழ்ச்சியில் அவர், "ஆர். எஸ்.எஸ். அமைப்புக்கு நான்தலைவணங்குகிறேன். நமது அகண்ட பாரதக் கொள்கையை பாதுகாப்பதிலும், நாட்டின் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றை பாதுகாப்பதிலும் ஆர்எஸ்எஸ் அமைப்பின் பங்கு அளப்பரியது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ள எனக்கு அழைப்புவந்தபிறகு,பலரும் என்னைதொலைபேசியில் அழைத்து வாழ்த்து தெரிவித்தனர். அது எனது இதயத்தை தொட்டது. ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பகவத்தை சந்திப்பது ஒரு நிறைவான அனுபவம்.இந்தநிகழ்ச்சியில் கலந்து கொண்டது என்னுடைய அதிர்ஷ்டம்" என தெரிவித்தார். பின்னர் நாக்பூரில் உள்ள ஆர்எஸ்எஸ் நிறுவனர் கே.பி.ஹெட்கேவாரின் நினைவிடத்தை பார்வையிட்ட பாடகர் சங்கர் மகாதேவன், "இன்று நான் பாரதிய குடிமகனாக இருப்பதில் பெருமைப்படுகிறேன். மக்கள் அனைவரும்தங்கள் துறைகளில் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

### 2,222 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க

## ஜனவரி 7ல் தேர்வு நவம்பர் 1 முதல் விண்ணப்பிக்கலாம் ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பு

சென்னை, அக். 26–

2,222 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு நடைபெறும் என்று ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையில் கீழ் இயங்கக்கூடிய அரசு பள்ளிகளில் 7 ஆண்டுகளுக்கு பிறகு பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான அறிவிப்பை பள்ளிக்கல்வித்துறையின் ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவிப்பைவெளியிட்டுள்ளது. மொத்தம் 2,222 இடங்கள் காலியாக உள்ளது. இதில் முதுநிலை ஆசிரியர்களாக 23 பேர் நியமிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கால அவகாசம் நவம்பர் மாதம் 1-ம் தேதி முதல் 30-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம். மேலும், www.trb.com என்ற இணைய தளத்தில் விண்ணப்பிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வு அடுத்த ஆண்டு ஜனவரி 7-ம் தேதி ஓஎம்ஆர் சீட் முறைப்படி நடத்தப்படும் என்று ஆசிரியர் தேர்வு வாரியம் அறிவித்துள்ளது. பள்ளி கல்வித்துறையின் கீழ் செயல்பட கூடிய 2,171 இடங்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட பள்ளிகளில் 23 காலி பணியிடங்களும், ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் செயல்பட கூடிய பள்ளிகளில் 16 காலி இடங்களும், மாற்றுத்திறனாளி நலத்துறையின் கீழ் உள்ள பள்ளிகளில் 12 காலி இடங்களும்என மொத்தம்2,222 காலி பணியிடங்களுக்கான அறிவிப்பு என்பது வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்- 394, ஆங்கிலம்- 252, கணிதம்- 233 மற்றும் இயற்பியல்-292 பணியிடங்களுக்கு தேர்வானது நடைபெறும். ஆசிரியர் பணி பெற்றுத் தருவதாக கூறி ஏமாற்றும் இடைத்தரகர்களை நம்ப வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. முற்றிலும் தகுதி அடிப்படையில் ஆசிரியர் பணி நியமனங்கள் நடைபெறும் என்றும் ஆசிரியர் தீர்வு வாரியம் அறிவித்துள்ளது.




### காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில்

## வரும் தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி நிலைய அதிகாரிகளுக்கு (BLO) பயிற்சி வகுப்பு



காரைக்கால் , அக். 26–

காரைக்கால் மாவட்ட தேர்தல் அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் வரும் தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடி நிலைய அதிகாரிகளுக்கு (BLO) பயிற்சி வகுப்பு நேருநகரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்றது.

இந்நிகழ்வு காலையில் நெடுங்காடுமற்றும்திருநள்ளாறு தொகுதிக்கும் மற்றும் மாலை காரைக்கால் (வடக்கு) மற்றும் காரைக்கால் (தெற்கு) மற்றும் நிரவி – டி ஆர் பட்டினம் ஆகிய தொகுதிகளுக்கும் பயிற்சி வகுப்பு நடைபெறுகிறது. இந்த பயிற்சி வகுப்பினை மாவட்ட ஆட்சியர் (பொறுப்பு) ஜான்சன் துவக்கி வைத்து பேசுகையில் இந்த பயிற்சி வகுப்பில் இவர்கள் கடைபிடிக்கும் பணிகள் குறித்து பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. பயிற்சி வகுப்பில் வாக்காளர் பதிவு அதிகாரிகள் ஜான்சன் மற்றும் சச்சிதானந்தன் உதவி வாக்காளர் பதிவு அதிகாரிகள் திரு.பொய்யாதமூர்த்தி ,மதன்குமார் செல்லமுத்து மற்றும் ஷண்முகசுந்தரம் மற்றும் 200-க்கும் மேற்பட்ட B.L.0.-க்கள் இந்த பயிற்சி முகாமில் பங்கேற்று பயன் பெற்றார்கள். இதன் தொடர்ச்சியாக வரும் 27.10.2023 முதல் 9.12. 2023 வரை வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு மற்றும் திருத்தப்பணிகள் நடைபெற உள்ளன.

இதன் தொடர்ச்சியாக 4.11.2023 மேலும் 5.11.2023 மற்றும் 18.11.2023 மேலும் 19.11.2023 ஆகிய நான்கு நாட்கள் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன. இந்த சிறப்பு முகங்களில் வாக்காளர்கள் பெயர் சேர்த்தல் மற்றும் பெயர் நீக்குதல் மற்றும் பிழை திருத்தம் மற்றும் விலாசம் மாற்றம் உள்ளவற்றை சென்று சரி பார்த்துக் கொள்ளலாம் எனவும் அந்தந்த வாக்குச்சாவடிகளில் குறிப்பிட்ட தினங்களில் பணியில் இருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளின் போது அவர்களுக்கு நோட்டு பேனா உள்ளிட்ட பொருட்கலடங்கிய பைகள் வழங்கப்பட்டன.

## 56 எரிகற்களை ஆய்வு செய்த கடலூர் மாணவர் நாசாவின் சான்றிதழ் பெற்ற மாணவருக்கு குவியும் பாராட்டு




கடலூர், அக். 26

கடலூர் வெள்ளி கடற்கரையில் விண்ணில் இருந்து விழுந்த எரிகற்களை ஆய்வு செய்து நாசாவின் சர்வதேச விண் ஆய்வாளர் சான்று பெற்றுள்ள 8-ம் வகுப்பு மாணவன் அனேஷ்வருக்கு பாராட்டுகள் குவிந்து வருகின்றனர்.

கடலூர் அண்ணாநகரில் வசிக்கும் மாணவர் அனேஷ்வர் தனியார் பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வருகிறார். இவர் கடலூர் வெள்ளி கடற்கரையில் விண்ணில் இருந்து விழுந்த 56 எரிகற்களை ஆய்வு செய்து நாசாவின் சர்வதேச விண் ஆய்வாளர் சான்றிதழை பெற்றுள்ளார். இதற்காக சர்வதேச விண்ணியல் தேடல் குழுமம் மற்றும் நாசாவுடன் இணைந்து மாணவர் அனேஷ்வருக்கு சான்றிதழ் வழங்கியுள்ளனர். அத்துடன் 7 விண் கற்களையும் கண்டுபிடித்து அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள கார்டின் சிமெண்ட்ஸ் பல்கலைக்கழகத்தின் விண் ஆய்வாளர் சான்றிதழும் பெற்றுள்ளார்.

மேலும் அனேஷ்வர் யூடியூபில் தமிழ்நாடு இளையோர் விண் ஆய்வு மையம் என்னும் அமைப்பை ஏற்படுத்தி மாணவர்களிடம் விண்வெளி ஆய்வு குறித்து ஆர்வத்தையும் ஏற்படுத்தி வருகிறார். எதிர்காலத்தில் கடலூரில் இருந்து ராக்கெட் ஏவ வேண்டும். மின் சட்டலைட் உருவாக்கி விண்ணில் செலுத்த வேண்டும் என்பதே தமது லட்சியம் என்று அனேஷ்வர் கூறியிருக்கிறார். மாணவர் அனேஷ்வரை கடலூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் நேரில் அழைத்து பாராட்டினர். மேலும், மாணவனை சமூக ஆர்வலர்கள், பொதுமக்கள், விண் ஆய்வாளர்கள் பலரும் பாராட்டுகளை தெரிவித்து வருகின்றனர்.

## விபத்தில் சிக்கியவர் மூளைச்சாவு உடல் உறுப்புகளை தானம் செய்த விவசாயிக்கு அரசு மரியாதையுடன் உடல் தகனம்



கடலூர், அக். 26–

கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி அருகே உடல் உறுப்புகளை தானம் செய்தவரின் உடல் அரசு மரியாதையுடன் தகனம் செய்யப்பட்டது.

குறிஞ்சிப்பாடி அருகே உள்ள கஞ்சமநாதன்பேட்டை கிராமத்தை சேர்ந்த விவசாயி கிருஷ்ணகுமார் சமீபத்தில் இருசக்கர வாகனத்தில் சென்ற போது விபத்தில் சிக்கினார். அவரது தலையில் படுகாயம் ஏற்பட்டதை அடுத்து கடலூர் தனியார் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அதன் பின்னரும் அவருக்கு சுயநினைவு திரும்பாததை அடுத்து மூளைச்சாவு ஏற்பட்டு இருப்பதை மருத்துவர்கள் உறுதி செய்தனர்.

இதையடுத்து கிருஷ்ணகுமாரின் உடல் உறுப்புகளை தானம் செய்ய அவரது குடும்பத்தினரும் வந்தனர். அவரது உடலில் இருந்து 2 சிறுநீரகம், கல்லீரல், கணையம் ஆகியவை தானமாக பெறப்பட்டது. உடல் உறுப்புகளை தானம் செய்தவரின் உடல் அரசு மரியாதையுடன் அடக்கம் செய்யப்படும் என அரசு அறிவித்து இருப்பதால் கடலூர் மாவட்ட ஆட்சியர், எஸ்.பி. ஆகியோரின் முன்னிலையில் கிருஷ்ணகுமாரின் உடல் தகனம் செய்யப்பட்டது. இறந்த கிருஷ்ணகுமாருக்கு மகன் மற்றும் மகள் இருப்பதால் அவரது குடும்பத்தினருக்கு அரசு உதவ வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

## தஞ்சையில் ராஜராஜ சோழனின் 1038வது சதய விழாவை ஒட்டி பெருவுடையாருக்கு 48 பேரபிஷேகம்



தஞ்சை, அக். 26–

தஞ்சையில் ராஜராஜ சோழனின் 1038வது சதய விழாவை ஒட்டி பெருவுடையாருக்கு 48 பேரபிஷேகம் நடைபெற்றது.

தமிழக வரலாற்றில் மாபெரும் வெற்றிகளை படைத்து தமிழ் ராஜ்ஜியத்தை கடல் கடந்துகொண்டு சென்ற மாமன்னன் ராஜராஜ சோழனின் 1038வது ஆண்டு சதய விழா நேற்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு அவரது மெய்கீர்த்தியை உலகறியச்செய்யும் வகையில் அமைந்துள்ள தஞ்சை பெரிய கோயிலும், தஞ்சை மாநகரமும் விழாக்கோலம் பூண்டு காணப்பட்டது.

தமிழ் முறைப்படி திருமுறை பாடல்கள் பாடியப்படி ஓதுவார்கள் நான்கு ராஜ வீதிகளில் உலா வந்தனர். ராஜராஜ சோழன் சிலைக்கு அரசு முறைப்படி மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிலையில் தேவார திருமுறை பாடல்கள் பாடி பெருவுடையாருக்கு 48 பேரபிஷேக நிகழ்வு நடைபெற்றது. விபூதி, மஞ்சள், தேன், பஞ்சாமிர்தம், பால், தயிர், இளநீர், சந்தனம் உள்ளிட்ட பொருட்களை கொண்டு பேரபிஷேகம் செய்யப்பட்டது.தொடர்ந்து மகா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. இதனை காண ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

ராஜராஜ சோழனின் புகழை போற்றும் வகையில் அவருக்கு சிறப்பு அலங்காரங்கள் செய்யப்பட்டு பெருவுடையார் சிலை முன்பாக ராஜராஜ சோழன் சிலை வைக்கப்பட்டு அபிஷேகம் நடைபெற்றது. நேற்றைய தினம் தஞ்சாவூர் மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்பட்டிருந்ததால் தஞ்சாவூர் மட்டுமின்றி சுற்றுவட்டார பொதுமக்கள் அனைவரும் சதய விழாவை காண குவிந்தனர்.

## கேள்வி அதானி பற்றியது அல்ல நாடாளுமன்ற கண்ணியம் பற்றியது மஹுவா குற்றசாட்டுகளுக்கு பாஜக எம்பி பதில்

புதுடெல்லி, அக். 26–

"இங்கே கேள்வி அதானி விவகாரம் பற்றியது இல்லை.. நாட்டின் பாதுகாப்பு குற்றம்சாட்டப்பட்ட எம்பியின் ஊழல் மற்றும் குற்றச் செயல் பற்றியது" என்று மஹுவாவின் குற்றச்சாட்டுக்கு பதிலடியாக நிஷிகாந்து துபே தெரிவித்துள்ளார்.

திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. மஹுவா மொய்த்ரா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப லஞ்சம் பெற்றுள்ளார் என்று பாஜக எம்.பி.நிஷிகாந்த் துபே சில தினங்களுக்கு முன்பு குற்றசாட்டு வைத்தார். மஹுவா மொய்த்ரா மக்களவையில் இதுவரை கேட்டுள்ள 61 கேள்விகளில் 50 கேள்விகள் அதானி குழுமம் தொடர்பானவை என்றும், அதானி குழுமத்தை குறிவைத்து கேள்வி எழுப்ப அவர் தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானியிடம் லஞ்சம் பெற்றுள்ளார் என்றும் அவர் குற்றம்சாட்டினார். இதுகுறித்து விசாரிக்க குழு அமைக்க வேண்டும் என்று மக்களவை சபாநாயகருக்கு நிஷிகாந்த் துபே கடிதம் எழுதியிருந்தார். அதனைத் தொடர்ந்து குற்றச்சாட்டில் அடிப்படை ஆதாரம் இருப்பதாகக்கூறி ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணைக்கு மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா உத்தரவிட்டார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பதில் அளித்திருந்த திரிணமூல் காங்கிரஸ் எம். பி., மஹுவா மொய்த்ரா, "போலி பட்டாதாரி மற்றும் பிற பாஜக பிரமுகர்கள் மீதான உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் நிலுவையில் உள்ளன. சபாநாயகர் அவைகளை எல்லாம் முடித்த பின்னர் என் மீதான குற்றசாட்டுக்கு விசாரணை குழு அமைக்கட்டும்" என்று தெரிவித்திருந்தார். இதனிடையே இந்தக் குற்றச்சாட்டுக்கு பதில் அளித்துள்ள பாஜக எம்.பி., நிஷிகாந்த் துபே, "இங்கே கேள்வி நாடாளுமன்ற கண்ணியம் பற்றியது, இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் குற்றம்சாட்டப்பட்ட எம்.பி.,யின் முன்னுரிமை, ஊழல் மற்றும் குற்றச்செயல் பற்றியது. தேசிய தகவல் மையத்தின் (என்ஐசி) மின்னஞ்சல் துபாயில் திறக்கப்பட்டதா இல்லையா,



கேள்வி கேட்பதற்கு பணம் பெறப்பட்டதா இல்லையா, உங்களுடைய வெளிநாட்டுப் பயணங்களுக்கு யார் செலவு செய்தது, பயணத்துக்கு மக்களவைசபாநாயகர்,இந்திய வெளியுறவு அமைச்சகத்திடம் அனுமதி பெறப்பட்டதா என்பவைகளுக்கு பதில் சொல்லவேண்டும். இங்கே கேள்வி அதானி, பட்டங்கள் மற்றும் திருட்டு பற்றியது இல்லை. உங்களின் ஊழல் மற்றும் நாட்டை தவறாக வழிநடத்துவது பற்றியது'' என்று தெரிவித்துள்ளார்.

இதனிடையே, இந்தக்குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளித்திருந்த தர்ஷன் ஹிராநந்தானி, மஹுவா மொய்த்ராவுக்கு லஞ்சம் வழங்கியதை ஒப்புக்கொண்டார். மேலும், மஹுவா மொய்த்ரா அவரது நாடாளுமன்ற கணக்கையும் அதன் கடவுச் சொல்லையும் தன்னிடம் கொடுத்தார் என்றும் அதன் மூலம் தேவைப்படும்போது மஹுவா சார்பாக தான் கேள்விகளை எழுப்பியதாகவும் தொழிலதிபர் தர்ஷன் ஹிராநந்தானி தெரிவித்தார். இதுகுறித்து மக்களவை ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு பிரமாண பத்திரம் அனுப்பியிருந்தார். இதன் பிரதியை சிபிஐ மற்றும் நிஷிகாந்த் துபேவுக்கும் மின்னஞ்சல் செய்திருந்தார். இதற்கு பதில் அளித்திருந்த மஹுவா, அந்தப் பிரமாணப் பத்திரம் பிரதமர் அலுவலகத்தில் இருந்து அனுப்பப்பட்டிருப்பதாகவும், ஹிரா நந்தானியை மிரட்டி கையெழுத்து வாங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு பதில் அளிக்கும் விதமாக தொலைக்கட்சி பேட்டி ஒன்றில் பேசி இருந்த ஹிராநந்தானி,"என்னுடைய தவறான தீர்மானத்தால் நான் இந்த விவகாரத்தில் இணைக்கப்பட்டிருப்பதாக நினைக்கிறேன். நான் என்ன நடந்தது என்பதை எனது பிரமாண பத்திரத்தில் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறேன். அந்தப் பிரமாணபத்திரத்தில் நானே கையெழுத்திட்டிருக்கிறேன். எனக்கு யாரும் அழுத்தம் கொடுக்கவில்லை, நானாகவே கையெழுத்திட்டேன். இதற்கு, துபாய் தூதரக அதிகாரி அலுவலகத்தில் நான் நோட்டரி பெற்றதே இதற்கு சாட்சி'' என்று தெரிவித்துள்ளார். இந்த விவகாரம் குறித்து மக்களவை ஒழுங்கு நடவடிக்கைக் குழு விசாரணை செய்ய இருக்கிறது.

## புதுச்சேரி காரைக்கால் நலவழிதுறை சார்பில் அயோடின் பற்றாக்குறை குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு



காரைக்கால் , அக். 26–

புதுச்சேரி காரைக்கால் நலவழிதுறை சார்பில் அயோடின் பற்றாக்குறை குறித்து அனைவருக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காரைக்கால் நலவழித்துறையின் மூலம் கட்டுரைப்போட்டி முவிசா உயர்நிலை பள்ளியில்நடத்தப்பட்டது.

அதன் பரிசளிப்பு நிகழ்ச்சியும் அயோடின் விழிப்புணர்வு கூட்டமும் நேற்று புதன்கிழமை மு.வி.ச பள்ளியில் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர். சிவராஜ்குமார் பரிசுகளையும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார் மேலும் அவர் மாணவ மாணியர்களிடத்தில் பேசும்போது அயோடின் சத்து குறைபாட்டால் இளம்வயதினருக்கு அறிவு திறன் பாதிக்கப்படும் பெரியவர்களுக்கு நரம்பு தளர்ச்சி ஏற்படும் என்றும் அயோடின் குறைபாடு முன்கழுத்து கழலை நோயை உண்டாக்கும் என்றும் கூறினார்கள். ஆகையால் அனைவரும் தினமும் அயோடின் கலந்தஉப்பை பயன்படுத்த வேண்டுமென கேட்டுக்கொண்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் நலவழித்துறை நோய் தடுப்பு தொழில்நுட்ப உதவியாளர் சீ.சேகர் பள்ளியின் தலைமை ஆசிரியர் தேவராஜ் சுகாதார ஆய்வாளர்கள் ஆண்ட்ரூஸ்,சிவவடிவேல் ஆகியோர் கலந்துக்கொண்டனர் நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை சுகாதார உதவியாளர்கள் பூமிநாதன்,இராஜவேலு ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர்

ராள்ளபாடி ஸ்ரீசாய்பாபா திருக்கோவிலில்

# விஜயதசமியை முன்னிட்டு 105 பெண்கள் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜை நடைபெற்றது



ஊத்துக்கோட்டை, அக்26–
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் அருகே ராள்ளபாடி கிராமத்தில் ஸ்ரீசாய்பாபா திருக்கோவில் உள்ளது.

இக்கோவிலில் சீரடி சாய்பாபாவின் 105-வது மகா ஜீவசமாதி அடைந்த நாளை முன்னிட்டும், விஜயதசமியை முன்னிட்டும், உலக மக்கள் நன்மை வேண்டியும் கோவில் வளாகத்தில் கணபதி பூஜை, சாய்பாபாவின் பரிபூரண அருள் வேண்டி மகா சங்கல்பம்,கணபதி ஹோமம், சீரடி சாய்பாபா ஹோமம், தன்வந்திரி ஹோமம்,சுதர்சன ஹோமம், சாய்பாபா மூல மந்திர ஹோமம், ஆயுள் அபிவிருத்தி வேண்டி ஆயுஸ் ஹோமம் உள்ளிட்ட ஹோமங்கள் நடைபெற்றது.

மதியம் கலச அபிஷேகம் நடைபெற்றது. இதைத்தொடர்ந்து கோயிலுக்கு வந்திருந்த பக்தர்களின் கரங்களால் மூலவருக்கு பாலபிஷேகம் செய்தனர். பின்னர், மூலவருக்கு மலர்களால் அலங்காரம் செய்து ஆரத்தி காண்பிக்கப்பட்டது. பின்னர், அனைத்து பக்தர்களுக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை பல்லாக்கு சேவை நடைபெற்றது.

இதைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு 105 பெண்கள் கலந்து கொண்ட திருவிளக்கு பூஜை நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை,உதயகுமார் தலைமையில் ஸ்ரீ சிவசாயி சேவா அறக்கட்டளையினர் மற்றும் பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



திண்டுக்கல் மாவட்டத்தில் தென் இந்தியா அளவில் நடைபெற்ற ஆணழகன் போட்டியில் நமது காரைக்காலின் ஃபிட்னஸ் ஷோன் ல் பயிற்சி பெற்ற இரண்டு மாணவர்கள் 5 பதக்கங்களை வென்று காரைக்கால் மாவட்டத்திற்க்கு பெருமை சேர்த்துள்ளார்கள், இந்த இரு மாணவர்களுக்கும் பயிற்சி அளித்த ஃபிட்னஸ் ஷோன் உரிமையாளரும் மற்றும் பயிற்சியாளருமான கோட்டுச்சேரி பகுதி திருவேட்டக்குடியை சார்ந்த மணிகண்ட பிரபுவிற்க்கு பாராட்டுகள் குவிந்து வருகிறது, இந்த போட்டியில் பங்கு பெற்ற இரு மாணவர்களும் காரைக்கால் மாவட்டம் திருமலைராயன் பட்டினத்தை சேர்ந்தவர்கள் இதில் தமிழ்செல்வன் ஜூனியர் 60 கிலோ எடை பிரிவில் முதல் இடத்தையும், ஆண்கள் பிசிக் பிரிவில் இரண்டாம் இடத்தையும் மற்றும் சீனியர் 60 கிலோ எடை பிரிவில் இரண்டாம் இடத்தையும் தட்டிச் சென்றார், இதில் மற்றொரு மாணவரான ஐயப்பன் சீனியர் 55 கிலோ எடை பிரிவில் மூன்றாம் இடத்தையு...

# காவேரிபூம்பட்டினம் பல்நோக்கு பேரிடர் மையத்தை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்



மயிலாடுதுறை,அக்,26
மயிலாடுதுறை மாவட்டம், சீர்காழி வட்டாரத்திற்குட்பட்ட காவேரிபூம்பட்டினம் கீழையூர் கலைஞர் நகரில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் தார் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு பணிகளின் தரத்தினை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, காவேரிபூம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் மாணவ, மாணவிகளின் கற்றல் திறனை மாவட்ட ஆட்சியர் பாடப்புத்தகங்களை வாசிக்க செய்து ஆய்வு செய்தார்.

பின்னர், காவேரிபூம்பட்டினம்பல்நோக்கு பேரிடர் மையத்தை மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டு, குடிநீர், கழிவறை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை ஆய்வு செய்தார்.

தொடர்ந்து, காவேரிபூம்பட்டினம் ஊராட்சி பூம்புகார் மீன்பிடி துறைமுகம் மற்றும் மீன் ஏலக்கூடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, மீனவ பிரதிநிதிகள் மற்றும் உள்ளாட்சி அமைப்பினர்களுடன் கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

ஆய்வின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் இளங்கோவன், சரவணன் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# பெரியபாளையத்தில் திமுக அரசை கண்டித்து பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்



திருவள்ளூர் , அக். 26–
திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் பஸ் நிலையம் எதிரே பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் தமிழக அரசு தேர்தலின் போது அறிவித்த வாக்குறுதிகளை உடனடியாக நிறைவேற்றக் கோரி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அப்பொழுது தமிழகத்தில் உள்ள அனைத்து இல்லத்தரசிகளுக்கும் உரிமை தொகை வழங்க வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தில் பணியாற்றிய அனைத்து பணியாளர்களுக்கு நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்,தேர்தல் வாக்குறுதியில் கூறிய அனைத்தையும் உடனடியாக செய்து தர வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு,பாரதிய ஜனதா கட்சியின் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட துணைத் தலைவரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான ஜெ.ரவி தலைமை தாங்கினார். மாநில அரசு பிரிவு தலைவர் அழிஞ்சிவாக்கம் எம்.பாஸ்கர் முன்னிலை வகித்தார்.இதில், சிறப்பு அழைப்பாளராக மாநிலத்துணைத்தலைவர் டால்பின் ஸ்ரீதர் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில மகளிர் அணி பொருளாளர் மாலினி ஜெயச்சந்திரன், ஓ.பி. சிஅணி மாவட்ட தலைவர் கே.ஜி.எம்.சுப்பிரமணி, மாவட்ட செயற்குழு உறுப்பினர் எம். எஸ்.பிரபாகரன், மஞ்சை எம்.ஆனந்தன், வெளிநாடு தமிழர் நலப்பிரிவு தலைவர் ஆர்.சுரேஷ், மாவட்ட வர்த்தக அணி துணைத்தலைவர் பூலித்துரை மற்றும் மாவட்ட, மண்டலபிரிவு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.முன்னதாக அனைவரையும் மாவட்ட கல்வியாளர் பிரிவு தலைவர் டி.எல்.பி.நாயுடு வரவேற்றார். முடிவில்,எல்லாபுரம் மேற்கு ஒன்றிய அமைப்பாளர் எம். ஜெயப்பிரகாஷ்,எல்லாபுரம் கிழக்கு ஒன்றிய அமைப்பாளர் மஞ்சை சுதாகர் ஆகியோர் நன்றி கூறினர்.

# வடசென்னை சீரடி சாய்பாபா திருக்கோவிலில் சிறப்பு பூஜைக்கு குவிந்த பக்தர்கள்



சென்னை, அக்,26
சென்னை புது வண்ணாரப்பேட்டை காமராஜர் சாலை பகுதியில் அமைந்துள்ள வட சென்னை சீரடி ஸ்ரீ சாய்பாபா திருக்கோவில் உள்ளது இக்கோவிலில் விஜயதசமியை முன்னிட்டு மற்றும் சீரடி சாய்பாபா மகா சமாதி நாளை முன்னிட்டு வடசென்னை சீரடி சாய்பாபாவுக்கு பொதுமக்கள் பாலபிஷேகம் செய்தனர் இதனை அடுத்து பாபா சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு காட்சியளித்தார்.

இதனைத் தொடர்ந்து நாதஸ்வரம் மேளதாளங்கள் முழங்க சங்க நாதம் முழங்க சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பின்னர் தீப தூப ஆராதனை மற்றும் மகா ஆர்த்தி எடுக்கப்பட்டது.

இதில் வடசென்னை உட்பட்ட திருவொற்றியூர் புது வண்ணாரப்பேட்டை ராயபுரம் வண்ணாரப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாய்பாபாவின் பாதங்களில் விழுந்து வணங்கி ஆசீர்வாதம் பெற்றுச் சென்றனர்

# மயிலாடுதுறை மாவட்ட காவல்துறையினர், மாவட்டம் முழுவதும் சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது அதிரடி நடவடிக்கை



மயிலாடுதுறை, அக்,26
மயிலாடுதுறை மாவட்ட காவல்துறையினரால் மாவட்டம் முழுவதும் 21.10.2023 மற்றும் 22.10.2023 ஆகிய இரு தினங்களில் சட்ட விரோதமாக மண் கடத்துவோர், கள்ள சாராயம் விற்பனை செய்வோர், தடைசெய்யப்பட்ட லாட்டரி டிக்கெட், கஞ்சா, குட்கா, புகையிலை பொருட்கள் விற்பனை செய்வோர், சூதாட்டங்களில் ஈடுபடும் நபர்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுவோர் மற்றும் பிடிகட்டளை எதிரிகளுக்கு எதிரான சிறப்பு வேட்டை நடத்தப்பட்டது.

இதில் மணல்மேடு காவல் நிலைய சரகத்தில் இரண்டு மாட்டு வண்டிகளில் மணல் கடத்தலில் ஈடுபட்ட இருவர் மீதும், மணல்மேடு, சீர்காழி, ஆணைக்காரன்சத்திரம் ஆகிய காவல் நிலைய சரகங்களில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட ஐந்து பேர் மீதும், மணல்மேடு, பூம்புகார், ஆணைக்காரன்சத்திரம் ஆகிய காவல்நிலைய சரகங்களில் சூதாட்டங்களில் ஈடுபட்ட 20 நபர்கள் மீது 06 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தடை செய்யப்பட்ட லாட்டரி டிக்கெட்டுகளை விற்பனை செய்த ஐந்து பேர் மீதும் வழக்கு பதிவு செய்து கைது செய்யபட்டுள்ளனர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் சட்ட விரோதமாக குட்கா மற்றும் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்களை விற்பனை செய்த 57 நபர்கள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

சட்டவிரோதமாக கள்ள சாராய விற்பனையில் ஈடுபட்ட 32 எதிரிகளும், இரண்டு பிடிகட்டளை எதிரிகளும் கைது செய்யபட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். மாவட்டம் முழுவதும் கடந்த இருதினங்களில் சாலை விதிகளை பின்பற்றாத நபர்கள் மீது 1,070 வழக்குகளும், குடிபோதையில் வாகனம் ஓட்டியவர்கள் மீது 54 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சட்ட விரோத செயல்களுக்கு எதிரான சிறப்பு வேட்டை மாவட்டத்தில் தொடர்ந்துநடைபெறும் எனவும், சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் பற்றிய தகவல்களை 8438456100 என்ற வாட்சப் எண்ணிலும், 9442626792 என்ற செல்பேசி எண்ணிலும் தெரிவிக்கலாம் எனவும், தகவல் அளிப்பவர்களின் விபரங்கள் பாதுகாக்கப்படும் எனவும் காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

குற்ற வழக்குகள் மற்றும் பல்வேறு குற்றச்சாட்டுகள் காரணமாக

# ஆறு வழக்கறிஞர்களுக்கு தடை விதித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சில் உத்தரவு

சென்னை,அக்,26
இது குறித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார்கவுன்சில் செயலாளர் ராஜ்குமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம் தலூக்காவை சேர்ந்த தெய்வகண்ணண் மீது செய்துங்கநல்லூர் காவல் நிலையத்தில் குற்றவியல்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளதால் இவர் வழக்கறிஞர் பணி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை பொன்னியம்மனமேடு தனிகாசலம் நகரை சேர்ந்த ஸ்ரீதர் மற்றும் மதுரை சிக்கந்தரசாவடி கமலா நகர் ஆகியோர் மீது குற்றவியல் வழக்குகள்பதிவாகியுள்தால் இவர்களில்வழக்கறிஞர் பணிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பார் கவுன்சில் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டம் தாதகாபட்டியை சேர்ந்த தியாகராஜன் மீது பல்வேறு குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதால் இவர் வழக்கறிஞர் பணி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

சென்னை ஆவடி கோவில் பதாகை கலைஞர் நகரை சேர்ந்த சுந்தரராஜன் மற்றும் அம்பத்தூர் லக்ஷ்மி அம்மன் நகரை சேர்ந்த கணேசன் ஆகியோர் மீது குற்றவியல் வழக்குகள்பதிவாகியுள்தால் இவர்கள் இருவரும் வழக்கறிஞர் பணி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது இவ்வாறு பார் கவுன்சில் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

சீர்காழியில் ரோட்டரி சங்கம் மற்றும்

# நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி



சீர்காழி,அக்.,26
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி ரோட்டரி சங்கம் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்கள் கலந்து கொண்ட சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

புதிய பேருந்து நிலையத்தில் ரோட்டரி சங்கம், சபாநாயகர் முதலியார் இந்து மேல்நிலைப்பள்ளி, பெஸ்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, அப்துல்கலாம் நர்சிங் கல்லூரி இணைந்து நடத்திய சாலை விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்ட மாணவ மாணவிகள் சீர்காழி நகரின் முக்கிய வீதிகள் வழியே சென்று சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு குறித்த பதாகைகளை ஏந்தியும் துண்டு பிரசுரங்கள் வழங்கியும் தலைக்கவசம் உயிர்க்கவசம் சாலை விதிகளை மதிப்போம் போதையில் பயணம் பாதையில் மரணம் படியில் பயணம் நொடியில் மரணம் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு விழிப்புணர்வு கோஷங்கள் எழுப்பியும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

100க்கும் மேற்பட்ட மாணவ மாணவியர் கலந்து கொண்ட பேரணி மீண்டும் புதிய பேருந்து நிலையத்தில் முடிவடைந்தது.

# சீர்காழி பகுதியில் கஞ்சா விற்ற மூவர் கைது, கஞ்சாவை பறிமுதல் தீவிர விசாரணை



சீர்காழி, அக். 26–
மயிலாடுதுறை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்பள்ளிமாணவர்கள் மற்றும் இளைஞர்களை குறி வைத்து கஞ்சா விற்பனை நடைபெற்று வருவதாக புகார்கள் எழுந்துள்ளன.

தொடர்ந்து கஞ்சா விற்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க எஸ்.பி. மீனா உத்தரவிட்டுள்ளார். இதனை அடுத்து மாவட்டத்திலுள்ள காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளில் கஞ்சா தேடுதல் வேட்டையை போலீசார் தீவிர படுத்தியுள்ளனர்.

இந்நிலையில் சீர்காழி உப்பனாற்றங்கரையில் கஞ்சா விற்கப்படுவதாக கிடைத்த தகவலின் பேரில் தனிப்படை காவல் ஆய்வாளர் மணிகண்ட கணேஷ் தலைமையிலான போலீசார் விரைந்து சென்று அங்கு கஞ்சா விற்பனை ஈடுபட்டிருந்த சீர்காழி சேந்தங்குடி பள்ளிவாசல் தெருவை சேர்ந்த முகமது பைசல் (21), வேட்டங்குடி கிராமத்தைச் சேர்ந்த கவின் குமார் (22), ஆகியோரை கைது செய்து அவர்களிடம் இருந்த ஒரு கிலோ 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

இதுபோல அரசூர் ரவுண்டானா பகுதியில் கஞ்சா விற்பனை செய்த அதே பகுதியை சேர்ந்த சஞ்சய் (19) என்பவரை கைது செய்த கொள்ளிடம் போலீசார் அவரிடமிருந்து 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் அருள்மிகு ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழா



திருவள்ளூர் , அக். 26–
திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், சென்னீர்குப்பம், வடக்கு பகுதியில் எழுந்தருளி அருள்பாளித்து வரும் அருள்மிகு ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி அம்மன் ஆலய புணராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக விழா மணிக்குள் வெகு விமரிசையாக நடைபெற்றது.

திருக்கோவில் சன்னதிகள் சீரமைக்கப்பட்டு, ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி அம்மன் மற்றும் பரிவார தெய்வங்களாகிய ஸ்ரீ பாலவிநாயகர்,ஸ்ரீபாலமுருகன், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, ஸ்ரீ மகாவிஷ்ணு, ஸ்ரீ விஷ்ணு துர்க்கை, ஸ்ரீ ஆதி ரேணுகா பரமேஸ்வரி ஆகிய தெய்வங்களுக்கு நூதன ஆலயம் எழுப்பப்பட்டு திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவினை தொடர்ந்து சுவாமி அலங்காரம், தீபாராதனை, பிரசாதம் வழங்குதல் ஆகிய நிகழ்ச்சிகளும் அதனைத் தொடர்ந்துசிறப்பு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்த நிகழ்வில், ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீ ரேணுகா பரமேஸ்வரி அம்மன் அருள் பெற்றுச் சென்றனர்.

கும்பாபிஷேகவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் பி.அன்பு, ஏ.அருணாச்சலம், ஜெ.பஞ்சாட்சரம் ஆகியோர் சிறப்பாக செய்தனர். யூனியன் கவுன்சிலர் பி.டில்லி குமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு கும்பாபிஷேக விழாவினை சிறப்பித்தார்.

# ஐதராபாத் அணியுடன் நடைபெற்ற கால்பந்து போட்டியில் சென்னையின் எப் சி அணி முதல் வெற்றி



ஐதராபாத் –அக்,26
ஐதராபாத் அணி, சென்னையின் எப்.சி. அணிகள் மோதின. 12 அணிகள் இடையிலான 10–வது இந்தியன் சூப்பர் லீக் (ஐ.எஸ்.எல்) கால்பந்து போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

இந்த தொடரில் ஐதராபாத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற போட்டியில் ஐதராபாத் அணி, சென்னையின் எப்.சி. அணி மோதின, விறுவிறுப்பாகநடைபெற்ற இந்த போட்டியில் சென்னை அணி சார்பில் கானர் ஷீல்ட்ஸ் ஆட்டத்தின் 7–வது நிமிடத்தில் ஒரு கோல் அடித்தார்.

ஐதராபாத் அணி ஆட்டம்முடியும்வரைஎந்த கோலும் அடிக்கவில்லை. இந்த நிலையில் ஆட்டநேர முடிவில் சென்னையின் எப்.சி. அணி 1–0 என்ற கோல் கணக்கில் ஐதராபாத் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது இந்த சீனனின் முதல் வெற்றியாகும் ,இந்த வெற்றியால் சென்னை ரசிகர்கள் சந்தோசத்தில் உள்ளனர். இனி சென்னையின் எப்.சி அணி அடுத்து அடுத்து நடைபெறும் போட்டிகளில்தொடர்ந்து வெற்றிபெற்றுரசிகர்களை மகிழ்ச்சி படுத்துமா என்று பொறுத்து இருந்து பார்ப்போம்

# 12 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் கிராம பஞ்சாயத்து ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டி ஊழியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்



காரைக்கால், அக்.26
10ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வரும் தினக்கூலி ஊழியர்கள் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்ற முதலமைச்சரின்அறிவிப்பின்படி, உள்ளாட்சி அமைப்புகளான கிராம பஞ்சாயத்துகளில் 12 வருடங்களுக்கு மேலாக தினக்கூலி ஊழியர்களாக பணியாற்றி வரும் ஊழியர்களை பணி நிரந்தரம் செய்ய காலதாமதம் செய்யும் உள்ளாட்சித்துறைநிர்வாகத்தை கண்டித்து கிராம பஞ்சாயத்து ஊழியர்கள், காரைக்கால் புதிய பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

ஆர்ப்பாட்டத்திற்கு கிராம பஞ்சாயத்து ஊழியர் சங்க தலைவர் நாகராஜன் தலைமை வகித்தார். காரை பிரதேச அரசு ஊழியர் சம்மேளன கௌரவத் தலைவர் ஜார்ஜ், தலைவர் சுப்ரமணியன், பொதுச் செயலாளர் ஷேக் அலாவுதீன், காரை பிரதேச நகராட்சி மற்றும் கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர் சம்மேளன தலைவர் அய்யப்பன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். முடிவில் சங்க செயலாளர் சகாயராஜ் நன்றி கூறினார். இக்கூட்டத்தில், சம்மேளனன நிர்வாகிகள் கலைச்செல்வன், திவ்வியநாதன், சந்தனசாமி, புகழேந்தி, கலைச்செல்வன், சங்க நிர்வாகிகள் முருகபூபதி, பிரபு, மகேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

# ராஜா அண்ணாமலை மன்றத்தில் திமுக சார்பில் 20 ஜோடிகளுக்கு திருமணம் அமைச்சர் எ.வ.வேலு நடத்தி வைத்தார்



தண்டையார்பேட்டை, அக். 26-
சென்னை கிழக்கு மாவட்டம், துறைமுகம் மேற்கு பகுதி திமுக சார்பில், மாவட்ட செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில், கலைஞர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, நேற்று காலை பிராட்வேயில் உள்ள ராஜா அண்ணாமலை மன்றத்தில் 20 ஜோடிகளுக்கு சீர்வரிசையுடன் திருமண நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மேற்கு பகுதி செயலாளர் எஸ். முரளி தலைமை தாங்கினார். அமைச்சர் சேகர்பாபு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசின் பொதுப்பணி துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் அமைச்சர் சேகர்பாபு ஆகிய இருவரும், ஏழை குடும்பங்களை சேர்ந்த 20 ஜோடிகளுக்கு சீர்வரிசைகள் வழங்கி, திருமணத்தை நடத்தி வைத்தனர். இதில் சென்னை மாநகராட்சி மேயர் பிரியா, எம்எல்ஏக்கள் ஜோசப் சாமுவேல், வெற்றியழகன், பகுதி செயலாளர் எஸ். ராஜசேகர், மண்டலக் குழுத் தலைவர்கள் ராமுலு, கூ.பி. ஜெயின், கவுன்சிலர் டிஎஸ்பி ராஜகோபால், நிர்வாகிகள் நாகராஜன், சதீஷ்குமார், விஜயகுமார், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, சேப்பாக்கம் பிரபாகரன் உள்பட பலர் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

# டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியில் நடைபெற்ற வித்தியாரம்ப நிகழ்ச்சியில் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன் பங்கேற்பு





ஊத்துக்கோட்டை, அக்26-
திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி ஒன்றியம், கவரப்பேட்டை அருகே பெருவாயல் பகுதியில் டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி மற்றும் டி.ஜெ.எஸ் பப்ளிக் பள்ளி இயங்கி வருகிறது. இந்நிலையில்,விஜயதசமியை முன்னிட்டு இப்பள்ளிகளின் சார்பாக வித்தியாரம்ப நிகழ்ச்சி டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

இதை முன்னிட்டு மாணவர்களின் வரவேற்பு நிகழ்ச்சியும், வரவேற்பு நடனமும், நவகிரக டான்ஸ்,யோகா நிகழ்ச்சி உள்ளிட்டவை நடைபெற்றது. இதன் பின்னர் பப்ளிக் பள்ளியில் எல்.கே.ஜி படிக்கும் தேன்மொழி என்ற சிறுமி 72 நாடுகளின் தலைநகரங்களை ஆசிரியர் கேட்க,கேட்க பதில் அளித்த நிகழ்ச்சி அனைவரையும் வியப்படைய வைத்தது. நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு,டி.ஜெ.எஸ் கல்விக்குழுமத்தின் தலைவரும்,கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான கல்வி நெறி காவலர் டி.ஜெ. கோவிந்தராஜன் தலைமை தாங்கி வித்யா ஆரம்ப நிகழ்ச்சியை துவக்கி வைத்து மாணவர்களுக்கு புத்தகப் பையை வழங்கினார்.

கல்விக் குழுமத்தின் மேலாண்மை இயக்குனரும், செயலாளருமான டி.ஜெ. ஆறுமுகம், டி.ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியின் தாளாளர் டாக்டர் பழனி,டி.ஜெ.எஸ் பப்ளிக் பள்ளியின் தாளாளர் சமூக நற்பணி செம்மல் டி.ஜெ.எஸ்.ஜி.தமிழரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில்,சிறப்பு அழைப்பாளராக திராவிட முன்னேற்றக்கழகத்தின் டெல்லி சிறப்பு பிரதிநிதியும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.கே.எஸ். விஜயன் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தி பேசினார்.

இந்நிகழ்ச்சியில், இயக்குனர்கள் விஜயகுமார், கபிலன்,தினேஷ்உறுப்பினர்கள் சண்முகசுந்தரம், ஜெயக்குமார், ராஜேஷ், கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் வி.லட்சுமிபதி, நிர்வாக அதிகாரி எஸ்.ஏழுமலை, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் ரமேஷ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மணிபாலன், செல்வசேகரன், பேரூர் செயலாளர் அறிவழகன், மீனவரணி மாவட்ட அமைப்பாளர் ஆறுமுகம் மற்றும் இருபால் ஆசிரியர்கள், பெற்றோர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். முன்னதாக அனைவரையும் டி.ஜெ.எஸ் பப்ளிக் பள்ளியின் முதல்வர் ஜே.அசோக் வரவேற்றார். முடிவில்,டி. ஜெ.எஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலை பள்ளியின் முதல்வர் பி.ஞானப்பிரகாசம் நன்றி கூறினார்.

# சங்கரன்கோவிலில் நாட்டு இன நாய்கள் வளர்ப்போர் சங்கம் மற்றும் வேட்டைக்காரர்கள் சங்கம் சார்பில் பொதுக்கூட்டம்




சங்கரன்கோவில், அக்.26-
தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் முப்புடாதி அம்மன் கோவில் திடலில் நாட்டு இன நாய்கள் வளர்ப்போர் சங்கம் மற்றும் வேட்டைக்காரர்கள் சங்கம் சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது, இந்திய ஜனநாயக மக்கள் கட்சியின் மாநில துணை பொதுச் செயலாளர் நெல்லை ஜீவா தலைமை வகித்தார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக திமுக தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்து கொண்டு பேசினார்,அப்போது அவர் முயல், காட்டுப்பன்றி ஆகியவற்றை வனவிலங்கு பட்டியலில் அகற்ற சட்டமன்றத்தில் கோரிக்கை வைக்கப்படும் என தெரிவித்தார், விவசாயத்திற்கு தீங்கு விளைவிக்கும் முயல், காட்டுப்பன்றி ஆகியவற்றை வனவிலங்கு பட்டியலில் இருந்து அகற்ற வலியுறுத்தியும், கன்னி சிப்பிப்பாறை கொம்பை இராஜபாளையம் ஆகிய நாய்களை பாதுகாத்திட அரசு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் எனவும், நாட்டின நாய்களுக்கு தனியாக கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

இதில் திமுக வடக்கு மாவட்டப் பொருளாளர் சரவணன் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கார்த்தி ஜெயக்குமார் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# முத்துராமலிங்க தேவருக்கு அணிவிக்கப்படும் தங்கக் கவசம் அதிமுக பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசனிடம் ஒப்படைப்பு



மதுரை, அக். 26,
முத்துராமலிங்க தேவருக்கு அணிவிக்கப்படும் தங்கக் கவசம் திண்டுக்கல் சீனிவாசனிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன்பின் பசும்பொன் தேவர் நினைவிட பொறுப்பாளர் வசம் தங்கக்கவசம் ஒப்படைக்கப்பட்டது.

அதிமுக சார்பில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலைக்கு ஒன்றரை கோடி ரூபாய் மதிப்பில் 13 கிலோ எடையுள்ள தங்க கவசத்தை 2014ம் ஆண்டு அப்போதைய அதிமுக பொதுச்செயலாளரும், முன்னாள் முதல்வருமான ஜெயலலிதா வழங்கியிருந்தார். ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 30ம் தேதி தேவர் குருபூஜை விழாவில் தங்கக்கவசம் அணிவிக்கப்படும்.

இதனிடையே, அதிமுகவில் எழுந்த பிரச்சனை காரணமாக அதிமுகவில் எடப்பாடி பழனிசாமி தலைமையில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டதை தொடர்ந்து இந்த ஆண்டு பசும்பொன் தேவர் தங்க கவசத்தை எந்த பிரச்சனையும் இல்லாமல் தன்னிடம் ஒப்படைக்க வேண்டும் என பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசன் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதன்படி பொருளாளராக நியமிக்கப்பட்டுள்ள திண்டுக்கல் சீனிவாசன் தேவர் தங்க கவசத்தை எடுக்கலாம் என நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், உயர்நீதிமன்ற உத்தரவின் பேரில் தங்கக்கவசம் அதிமுக பொருளாளர் திண்டுக்கல் சீனிவாசனிடம் வழங்கப்பட்டது. மதுரை அண்ணாநகரில் பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து 13 கிலோ தங்க கவசத்தை திண்டுக்கல் சீனிவாசன் பெற்றுக் கொண்டார். பலத்த காவல்துறை பாதுகாப்புடன் பசும்பொன் கிராமத்திற்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தேவர் குருபூஜை விழாவில் அதிமுக பொதுச்செயலாளராக உள்ள எடப்பாடி பழனிசாமி கலந்துகொள்ள உள்ளது நினைவுகூரத்தக்கது.



புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்கம் சார்பாக போலியோ தினம் சங்கத் தலைவர் அசோகன் தலைமையில் அரசு அலுவலர்கள் கட்டிடத்தில் நடைபெற்றது, முன்னதாக வருகை தந்த அனைவரையும் புத்தாஸ் மார்ஷியல் ஆர்ட்ஸ் நிறுவனத் தலைவரும் புதுக்கோட்டை சிட்டி ரோட்டரி சங்க உறுப்பினருமான சேது கார்த்திகேயன் வரவேற்றார், நிகழ்ச்சியில் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்கத் தலைவர் மாருதி மோகன் ராஜா பேசினார், நிகழ்ச்சியில் சங்கச் செயலாளர் முத்தன் அரசகுமார், பொருளாளர் சங்கர், நேரு யுவகேந்திரா அலுவலர் நமச்சிவாயம் மருத்துவர்கள், பள்ளி குழந்தைகள் மற்றும் பெற்றோர்கள் சுமார் 100 பேர் கலந்துகொண்டனர்.



தென்காசி மாவட்டம்-வாசுதேவநல்லூர் அருகிலுள்ள சுப்பிரமணியபுரத்தில் இயங்கி வரும் வியாசாபெண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் சென்னையை சேர்ந்த டிரைவ் மேனேஜ்மென்ட் சர்வீஸ் கம்பெனி சார்பாக இரு நாட்கள் வேலை வாய்ப்பு பயிற்சிமுகாம் நடைபெற்றது. இளங்கலை இறுதி ஆண்டு பயிலும் மாணவியர்கள் கலந்து கொண்டனர், மூன்றாம் நாள் இன்டர்வியூவில்132 மாணவியர்களுக்கு பணி நியமன ஆணைகள் கம்பெனியின் ஹெச் ஆர் மேனேஜர் சபரியால் பணி நியமன ஆணைகள் பெற்ற மாணவியர் ஆப்பிள் கம்பெனிக்கு பணி அமர்த்தப்பட உள்ளனர். முகாம் ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் ஈஸ்வரன், தேர்வு ஒருங்கிணைப்பாளர் சுஜாதா மற்றும் வியாசா கல்லூரி வேலைவாய்ப்பு அலுவலர் பாண்டிலட்சுமி ஐ.கியூ.எ.சி. ஒருங்கிணைப்பாளர் ஞா.ஏஞ்சல் பிரியதர்ஷினி மற்றும் ஆங்கிலத்துறை பேராசிரியர்கள் ஏற்பாடு செய்திருந்தனர் பணிக்கு தேர்வு செய்யப்பட்ட மாணவியரை கல்லூரி சேர்மன் வெள்ளத்துரை பாண்டியன் நிர்வாக இயக்குனர் வெள்ளத்தாய் அனைவரையும் பாராட்டி வழி அனுப்பி வைத்தனர்.



மதுரை சிந்தாமணி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தொழிலதிபர் சாத்தூர் ரவிச்சந்திரன் - இன்பாதேவி W.P.A.R அருண் நாகராஜன் - கல்பனா இவர்களின் இல்ல திருமண விழா நடிகர் அரவிந்த்சாமி, பாலசுப்பிரமணி ஆதித்தனார் ஆகியோரின் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது, இந்நிகழ்வில் அரசியல் கட்சி தலைவர்கள், அமைச்சர்கள், தொழிலதிபர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு மணமக்கள் அஸ்வின் சுந்தர் - கீர்த்தினி ஆகியோரை வாழ்த்தினர்.

# வடகிழக்கு பருவமழை, பரவும் டெங்கு காய்ச்சல் தீவிரப்படுத்தப்படும் கொசு ஒழிப்பு பணி

சென்னை, அக். 26-
டெங்கு தடுப்பு பணியை தீவிரப்படுத்துமாறு அரசு மருத்துவமனைகளுக்கு பொது சுகாதாரத்துறை இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டில் கடந்த சில மாதங்களாக டெங்கு நோயின் பரவல் அதிகரித்து வருகிறது. மாநிலம் முழுவதும் அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் சார்பில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்த போதும், டெங்கு பரவலின் தாக்கம் அதிகரித்தே காணப்படுகிறது.

இதன் காரணமாக ஏராளமானோர் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். இந்நிலையில் வடகிழக்கு பருவமழை துவங்கி இருக்கும் நிலையில் டெங்கு காய்ச்சல் பரவலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதையடுத்து டெங்கு காய்ச்சலுக்கான சிறப்பு வார்டுகளையும், படுக்கைகளையும் தயாராக வைக்குமாறு அரசு மருத்துவமனைகளுக்கு தமிழ்நாடு பொது சுகாதாரத்துறை இயக்குநர் செல்வவிநாயகம் அறிவுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு முழுவதும் டெங்கு தடுப்பு கண்காணிப்பு பணிகளை முடுக்கிவிட வலியுறுத்தியுள்ள அவர், வீடுகள் தோறும் மருத்துவ கண்காணிப்பை முன்னெடுக்கவும், கொசு ஒழிப்பு பணிகளை கிராமங்கள், நகரங்களில் விரிவுபடுத்துமாறும் வலியுறுத்தியுள்ளார்.



மதுரை கருப்பாயூரணி பகுதியில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் அரசு முதல் நிலை ஒப்பந்ததாரர் ராமர் - கவிதா M.R.V. குரூப் சேர்மன் மாணிக்கவாசகம் - மகேஸ்வரி இவர்களின் இல்ல திருமண விழா மதுரை வடக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது, இந்நிகழ்வில் அமைச்சர் பெருமக்கள், அனைத்து கட்சி தலைவர்கள், தொழிலதிபர்கள், உறவினர்கள், நண்பர்கள் என பலர் கலந்து கொண்டு மணமக்கள் பிருத்விராஜன் - ரவீனா வாசகம் ஆகியோரை வாழ்த்தினர்.

# அறந்தாங்கி அருகே மேல்மங்கலத்தில் 7- ஆம் ஆண்டாக கைப்புறா மாடு எல்கை பந்தயம்



அறந்தாங்கி,அக்.26-
புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே மேல்மங்கலம் கிராமத்தில் ஆகாச பிள்ளையார் திருக்கோயில் அமைந்துள்ளது, இத்திருக்கோவிலில் ஆயுத பூஜையை முன்னிட்டு 7- ஆம் ஆண்டாக வீரர்கள் மாட்டை கையில் பிடித்து கொண்டு ஓடும் கைப்புறா மாட்டு பந்தயம் நடைபெற்றது.

பந்தயத்தில் பெரியமாடு,சின்னமாடு என இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் அறந்தாங்கி சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து மொத்தம் 32 மாடுகள் மற்றும் 32 வீரர்கள் கலந்து கொண்டனர், பெரியமாட்டிற்கு 5 மைல் தொலைவும் சின்னமாட்டிற்கு 3 மைல் தொலைவும் நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது, நிர்ணயிக்கப்பட்ட பந்தய எல்கையை நோக்கி மாடுகளை கையில் பிடித்துக் கொண்டு வீரர்கள் ஓட்டம் பிடித்தனர்.

போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாட்டின் உரிமையாளர்கள் மற்றும் சிறப்பாக மாடுகளை ஓட்டி வந்த மாட்டின் சாரதிகளுக்கு, மொத்தம் 50 ஆயிரம் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டது, கைப்புறா பந்தய நிகழ்ச்சியினை சாலையின் இருபுறமும் நின்று ஆயிரக்கணக்கான ரசிகர்கள் கண்டு ரசித்தனர்.

# சங்கரன்கோவிலில் தென்காசி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கூட்டம்



சங்கரன்கோவில்,அக்.26-
தென்காசி வடக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள வடக்கு மாவட்ட கழக செயலாளர் அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது, கூட்டத்திற்கு மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் கிப்ட்சன் ராஜா தலைமை வகித்தார், ஒன்றியச் செயலாளர்கள் பெரியதுரை, ராமச்சந்திரன் ,நகரச் செயலாளர் பிரகாஷ் முன்னிலை வகித்தனர்.

இதில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ கலந்துகொண்டு தகவல் தொழில் நுட்பம் எவ்வாறு செயல்பட வேண்டும் என்பதை குறித்து ஆலோசனைகள் வழங்கினார், தொடர்ந்து இதில் பங்கேற்ற நிர்வாகிகள் களப்பணி செய்ய தங்களது கருத்துக்கள் குறித்து பேசினர், அதனை கேட்டுக் கொண்ட வடக்கு மாவட்டச் செயலாளர் ராஜா எம்எல்ஏ தகவல் தொழில் நுட்ப அணி செயல்பாட்டிற்கு வடக்கு மாவட்ட கழகம் என்றும் துணையாக இருக்கும் என தெரிவித்தார்.

இதில் மாவட்ட துணை அமைப்பாளர்கள் சிவாஜி, ரெஜிகலா, வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் சுவாமிநாதன் ,ரஜினிகாந்த், சங்கரேஸ்வரி, சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் மகேஷ்பாண்டியன், வீமராஜ், சங்கரேஸ்வரி, நகர தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கணேஷ் ,சங்கர்ராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர், முடிவில் மாவட்டப் பொருளாளர் சரவணன் நன்றி கூறினார்.

# தென்காசி ஷீரடி வைத்தியசாயி திருக்கோவிலில் பாபாவின் 105வது சமாதி நாள் நிகழ்ச்சி



தென்காசி,அக்.26-
தென்காசி மங்கம்மா சாலை அருகே, களக்கோடி தெருவில் அமைந்துள்ள ஷீரடி வைத்தியசாயி திருக்கோவிலில் பாபாவின் 105வது சமாதி நாள் நிகழ்ச்சி நடைபெற்றது, நேற்று காலை 6.15க்கு காலை ஆரத்தியும், 7 மணிக்கு அபிஷேகம் மற்றும் ஆரத்தியும், காலை 8 மணி முதல் 12 .30 மணி வரை பாபாவுக்கு பால் அபிஷேகம் பக்தர்கள் தாங்கள் கொண்டு வந்த பாலை தாங்களே பாபாவிற்கு நேரடியாக அபிஷேகம் செய்து கொள்ளும் நிகழ்ச்சியும், மதியம் 12 45 மணிக்கு அஷ்டோத்திரம், பகல் ஆரத்தியும், 1:30 க்கு அன்னதானமும், 2.20க்கு தியானமும், 2.30க்கு பக்தர்கள் பாபாவிற்கு நெய் விளக்கு ஏற்றி அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

மாலை 6.30க்கு மாலை சிறப்பு ஆரத்தியும் 7 மணிக்கு பல்லக்கு ஊர்வலமும், 8:30 மணிக்கு இரவு ஆரத்தி நிகழ்ச்சியும் நடைபெற்றது, இந் நிகழ்ச்சியில் தென்காசி மற்றும் சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு பாபாவை தரிசனம் செய்தனர், இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கோவில் அறங்காவலர்கள் அறிவழகன், சியாமளா மற்றும் கோவில் பணியாளர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

## சீர்காழி அருகே கந்து வட்டி கும்பல் பயங்கர ஆயுதங்களுடன் மிரட்டல்,

# போலீசார் நடவடிக்கை எடுக்காததால் காவல் நிலையம் முன்பு தீ குளிக்க போவதாக பெண் குமுறல்





சீர்காழி, அக்,26
மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த கீழமூவர்கரை மீனவர் கிராமத்தை சேர்ந்த கலியமூர்த்தி என்பவரின் மனைவி லட்சுமி. இவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தனது மகன் வினோத் வெளிநாட்டிற்கு வேலைக்கு செல்ல அதே பகுதியை சேர்ந்த சம்பந்தமூர்த்தி மனைவி அஞ்சம்மாளிடம் 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கொடுத்துள்ளார்.

அதனைத்தொடர்ந்து சம்பந்தமூர்த்தி மனைவி அஞ்சம்மாள் மூலம் தனது மகன் வினோத் சிங்கப்பூர் சென்று அங்கு சரியான வேலை இல்லாததால் 15 நாட்களில் மீண்டும் ஊர் திரும்பினார். இது குறித்து அஞ்சம்மாளிடம் கேட்டபோது மீண்டும் நல்ல வேலைக்கு அனுப்பிவைத்தாக கூறி வந்துள்ளார். இதனிடையே அஞ்சம்மாளிடம் லட்சுமி 20 ஆயிரம் கடனாக வாங்கியுள்ளார்.

இந்நிலையில் வினோதை மீண்டும் வெளிநாடு செல்ல ஏற்ப்பாடு செய்யாமல், அஞ்சம்மாள் லட்சுமியிடம் கொடுத்த 20 ஆயிரம் ரூபாய் கடனை திருப்பி கேட்டுள்ளார். அதற்காக லட்சுமி எனது மகனை வெளிநாட்டு அனுப்ப எண்ணிடம் வாங்கிய 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாயில் அந்த 20 ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொள் என கூறியுள்ளார். இதனை தொடர்ந்து கடந்த சில மாதங்களாக 20 ஆயிரம் ரூபாய்க்கு வட்டியுடன் சேர்ந்து 1 லட்சத்து 90 ஆயிரம் ரூபாய் தரச்செல்லி தனது கணவர் உள்ளிட குடும்பத்தினருடன் இரும்பு கம்பி, கத்தி, கட்டை உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் லட்சுமி வீட்டிற்கு வந்து கொலை மிரட்டல் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து வீடியோ ஆதாரங்களுடன் லட்சுமி திருவெண்காடு காவல்நிலையத்தில் புகார் அளிக்க சென்றால் அவரின் புகாரை பெறாமல் காவல்துறையினர் அஞ்சம்மாள் தரப்பினருக்கு ஆதரவாக செயல்படுவதாக கூறுகிறனர். மேலும், இது தொடர்பாக மயிலாடுதுறை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கடந்த 19-ம் தேதி புகார் அளித்த நிலையில் இதுவரை எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என வேதனை தெரிவிக்கும் லட்சுமி,

தனது புகார் மீது காவல்துறையினர் நடவடிக்கை எடுக்க வில்லையென்றால் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் முன்பு தீ குளித்து தற்கொலை செய்து கொள்ள போவதாக தெரிவித்துள்ளார். மேலும் 20 ஆயிரம் ரூபாய் கடனுக்கு 1 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் கேட்டு கொலை மிரட்டல் விடுத்த சம்பவமும் அது குறித்து வீடியோ காட்சி அளித்தது நடவடிக்கை எடுக்க தயங்கும் காவல்துறையினர் செயல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.

வரலாறு விளையாட்டு

# உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தானின் செயல்பாடு மிக அபாரமாக உள்ளது – சச்சின் தெண்டுல்கர் பாராட்டு



**மும்பை : அக். 26,**
**உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தானின் செயல்பாடு மிக அபாரமாக உள்ளது என சச்சின் தெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.**

பாகிஸ்தானை முதல்முறையாக தோற்கடித்து வரலாறு படைத்த மகிழ்ச்சியான தருணத்தை ஆப்கானிஸ்தானில் ரசிகர்கள் 'ஜிந்தாபாத்' முழக்கத்தோடு கொண்டாடினர். வீரர்கள் தங்களுக்குரிய பஸ்சில் லுங்கி டான்ஸ் பாடலுக்கு ஆட்டம் பாட்டத்துடன் அமர்க்களப்படுத்தினர். இன்னொரு பக்கம் அவர்களுக்கு பாராட்டுகளும் குவிகிறது.

இந்திய முன்னாள் வீரர் சச்சின் தெண்டுல்கர் தனது சமூக வலைதள பதிவில், 'உலகக் கோப்பையில் ஆப்கானிஸ்தானின் செயல்பாடு மிக அபாரமாக உள்ளது. கட்டுக்கோப்பான பேட்டிங், களத்தில் அவர்களது போராடும் குணம், ரன் எடுக்க ஓடுவதில் வெளிப்படும் ஆக்ரோஷம் அவர்களது கடின உழைப்பை பிரதிபலிக்கிறது. நிச்சயமாக இது அஜய் ஜடேஜாவின் தாக்கத்தினால் மட்டுமே இருக்க முடியும். வலிமையான பந்து வீச்சுடன், இங்கிலாந்து, பாகிஸ்தான் போன்ற அணிகளுக்கு எதிராக பெற்றுள்ள வெற்றி புதிய ஆப்கானிஸ்தான் அணி உருவாகி இருக்கிறது என்பதை காட்டுகிறது. கிரிக்கெட் உலகம் இதை கவனத்தில் கொள்கிறது' என்று கூறியுள்ளார்.

இந்தியமுன்னாள்வீரரான அஜய் ஜடேஜா உலகக் கோப்பை போட்டிக்கான ஆப்கானிஸ்தான் அணியின் ஆலோசகராக உள்ளார். 1996-ம் ஆண்டு உலகக் கோப்பை கால்இறுதியில் பாகிஸ்தானுக்கு எதிராக 25 பந்தில் 45 ரன் திரட்டி இந்தியாவின் வெற்றிக்கு வித்திட்ட ஜடேஜா, இப்போது அதே பாகிஸ்தானுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் அணிக்கு வழிகாட்டியாக இருந்து வெற்றிக்கு அழைத்து சென்றுள்ளார்.

# பாரா ஆசிய விளையாட்டு
## ஆடவர் ஈட்டி எறிதலில் இந்தியாவுக்கு தங்கம்
## புதிய சாதனையுடன் சுமித் ஆன்டில் அசத்தல்



**ஹாங்சோ : அக். 26,**
**4வது ஆசிய பாரா விளையாட்டுப் போட்டி தொடர் சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது.**

இதில் நேற்று நடந்த ஆடவர் ஈட்டி எறிதல் போட்டியில் ஆடவர் எப்64 பிரிவில் இந்தியாவின் சுமித் ஆன்டில் 73.29 மீட்டர் தூரம் வீசிய புதிய சாதனையுடன் தங்கம் வென்றார். இதற்கு முன் அவர் இந்த ஆண்டின் தொடக்கத்தில் பாரிஸில் நடந்த உலக தடகள சாம்பியன்ஷிப்பில் 70.83 மீட்டர் தூரம் வீசிய இருந்த நிலையில் அதனை தகர்த்தார்.

மற்றொரு இந்திய வீரர் புஷ்பேந்திரா 62.06 மீட்டர் தூரத்தை எறிந்து வெண்கல பதக்கம் கைப்பற்றினார்.

இலங்கையின் ஆராச்சிகே சமிதா 64.09 மீட்டர் எறிந்து வெள்ளிப்பதக்கத்தை வென்றார். மற்றொரு இந்திய வீரர் சந்தீப், 4வது இடத்தைப் பிடித்தார். இதில் சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால், இந்த 4 பேரை தவிர, மற்ற எவரும் 50 மீட்டர் தூரம் கூட எட்டவில்லை. பதக்க பட்டியலில் இந்தியா மொத்தம் 10 தங்கம், 12 வெள்ளி,16 வெண்கலம் என மொத்தம் 38 பதக்கங்களுடன் 5வது இடத்தில் உள்ளது.

# ரோகித் கேப்டன்சியின் 'சிறந்த நகர்வு'
## பாகிஸ்தான் குறித்த மைக்கேல் வாகனின் கருத்து வைரல்



**சென்னை : அக். 26,**
**'உலகக் கோப்பை கிரிக்கெட்-2023' தொடரில் கடந்த 14-ம் தேதி இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் விளையாடின. இதில் இந்தியா அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தோல்விக்கு பிறகு மிக்கி ஆர்தர் தனது கருத்தை தெரிவித்தார். மிக்கி ஆர்தர், "நேர்மையாகக் கூற வேண்டுமெனில் இது ஐசிசி நிகழ்வு போல் அல்ல. பிசிசிஐ நிகழ்வு போல இருந்தது. இருதரப்பு தொடர்போல் இருந்தது. மைதானத்தில் 'தில் தில் பாகிஸ்தான்' சப்தம் கேட்கவே இல்லை" எனக் கூறியிருந்தார். இவரின் இந்தக் கருத்துக்கு விமர்சனங்கள் எழுந்தன.**

இந்நிலையில், மிக்கி ஆர்தரின் இந்தக் கருத்தை இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் கலாய்க்கும்விதமாக பேசியிருக்கும் வீடியோ தற்போது வைரலாகி வருகிறது. சென்னையில் ஆப்கானிஸ்தான் அணியுடனான பாகிஸ்தான் தோல்விக்கு பின் இந்த வீடியோ வெகுவாக பகிரப்பட்டுவருகிறது.

இங்கிலாந்து அணியின் முன்னாள் கேப்டன் மைக்கேல் வாகன் மற்றும் ஆஸ்திரேலிய முன்னாள் வீரர் ஆடம் கில்கிறிஸ்ட் ஆகியோர் பாட்காஸ்டில் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது கில்கிறிஸ்ட் ரோகித்சர்மாவின்கேப்டன்சி குறித்து சிலாகித்து பேசிக்கொண்டிருப்பார். அப்போது மைக்கேல் வாகன் குறுக்கிட்டு, "ரோகித் சர்மாவின் திறமை குறித்து சரியாக சொன்னீர்கள் கில்கிறிஸ்ட். மைதானத்தில் வீரர்களை பயன்படுத்திய விதம், குறிப்பாக சிராஜுக்கு கூடுதல் ஓவர்களை வழங்கி ஊக்கப்படுத்தியது ரோகித் கேப்டன்சிக்கு உதாரணம். பேட்டிங்கிலும் அவர் சிறப்பாக செயல்பட்டதை சொன்னீர்கள்.

இந்தத் தருணத்தில் நான் கூற விரும்புவது, ஒன்றுதான். அது பாகிஸ்தான் அணியின் நிர்வாக இயக்குநர் மிக்கி ஆர்தர் கூறியதுபோல், "தில் தில் பாகிஸ்தான்" பாடலை ஒலிபரப்ப வேண்டாம் என டிஜேவிடம் கூறியதுதான் ரோகித் கேப்டன்சியின் முக்கிய நகர்வு. அந்தப் பாடல் ஒலிபரப்பப்படாதுதான் பாகிஸ்தானின் தோல்விக்கு காரணம் என மிக்கி ஆர்தரே ஒப்புக்கொண்டுள்ளார். இதனை முன்பே தெரிந்துகொண்டுதான் உத்வேகம் தரும் அப்பாடலை பாகிஸ்தான் அணியினர் கேட்கக்கூடாது என்பதை புரிந்துகொண்ட ரோகித் டிஜேவிடம் 'தில் தில் பாகிஸ்தான்' பாடலை ஒலிக்கக் கூடாது என்று தெரிவித்துள்ளார். உண்மையில் இது ரோகித்தின் புத்திசாலித்தனத்தை காட்டுகிறது. ஏனெனில் பெரும்பாலான கேப்டன்கள் டிஜேக்கள் குறித்து யோசிப்பது இல்லை. ஆனால் அந்த விஷயத்தில் ரோகித் புத்திசாலித்தனமாக செயல்பட்டுள்ளார்'' எனக் கலாய்த்தார். இந்த வீடியோ தற்போது மீண்டும் வைரலாகிவருகிறது.

# 1988-ல் சச்சின், 2007-ல் தோனி
## இந்திய அணிக்காக எடுத்த இரு வரலாற்று முடிவுகள் குறித்து
## வெங்சர்க்கார் பகிர்வு



**புதுடெல்லி : அக். 26,**
**இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் மற்றும் தேர்வுக்குழு தலைவர் திலீப் வெங்சர்க்கார். இவர், இந்திய கிரிக்கெட்டின் வரலாற்றை மாற்றிய இரண்டு முடிவுகளில் முக்கிய பங்கு வகித்துள்ளார். அது, 1988-ல் மும்பை ரஞ்சி டிராபி அணிக்காக சச்சின் டெண்டுல்கரைத் தேர்வு செய்ய பரிந்துரைத்தது. மற்றொன்று, 2007 டி20 உலகக் கோப்பைக்கு எம்எஸ் தோனியை இந்திய அணியின் கேப்டனாக நியமித்தது.**

சமீபத்தில்நடந்த'திலார்ட்ஸ் ஆஃப் வான்கடே' என்ற புத்தக வெளியீட்டு விழாவில், இந்த இரண்டு சம்பவங்களையும் நினைவுகூர்ந்துள்ளார் வெங்சர்க்கார். சச்சினை பார்த்த தருணத்தை விவரித்த அவர், "எனது 100-வது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக, பார்சி ஜிம்கானாவில் விளையாடிக கொண்டிருந்தேன். அப்போது மறைந்த முன்னாள் வீரர் வாசு பரஞ்சபே, என்னிடம் வந்து சச்சின் என்ற 14 வயது சிறுவனைப் பார்க்க வரவேண்டும் என்றார். டீ குடிக்கச் சென்றபோது சச்சின் விளையாடும் போட்டியை பார்க்கச் சென்றேன். அந்த போட்டியில் சச்சின் 300 ரன்கள் எடுத்தார்.

அதன்பின், சச்சினை இந்திய அணிக்கான நெட் பயிற்சியில் பங்கேற்க செய்ய வேண்டும் என வாசு சார் என்னிடம் வலியுறுத்தினார். ஆனால், சச்சின் 'பார்ப்பதற்கு சின்ன பையன்' போல் இருப்பதாக எனக்கு தோன்றியது. எனது எண்ணத்துக்கு மாறாக, இந்திய அணியின் முக்கிய பவுலர்களான கபில்தேவ், அர்ஷத் அயூப்போன்றோருக்கு எதிரான சச்சின் மிகவும் நம்பிக்கையுடன் பேட்டிங் செய்தார்.

அதேநாளில் மும்பை ரஞ்சி கோப்பை அணிக்கான வீரர்கள்தேர்வுநடந்தது. அதில் சச்சினை தேர்வு செய்யும்படி கேட்டுக்கொண்டேன். ஆடும் லெவனில் இல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் அணியிலாவது தேர்வுசெய்யவற்புறுத்தினேன். அதன்படி, குஜராத் அணிக்கு எதிராக அறிமுக போட்டியில் சதம் அடித்த சச்சின், துலீப் டிராபி மற்றும் இரானி டிராபியிலும் சதம் அடிக்க பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில் பங்கேற்கும் வாய்ப்பு உண்டானது. இதன்பின் நடந்தவை அனைத்தும் வரலாறு" என நெகிழ்ந்தார் வெங்சர்க்கார்.

தோனியைப் பற்றி பேசுகையில், "தோனி அதற்கு முன் மாநில அணி உட்பட எந்த அணியையும் கேப்டனாக வழிநடத்தியதில்லை. ஆனால், நாங்கள் அவரை டி20 உலகக் கோப்பைக்கு கேப்டனாக தேர்வு செய்தோம். ஏனெனில் தோனி மிகவும் ஆக்ரோஷமானவர். பாசிட்டிவ் மனநிலை கொண்டவர். அவரை கேப்டனாக்க அனைவரும் உடனடியாக சம்மதித்தனர்" என அப்போது நடந்தநிகழ்வுகளைபற்றிமனம் திறந்தார் திலீப் வெங்சர்க்கார்.

முன்னதாக, சிலமாதங்கள் முன்பு எம்எஸ் தோனி இந்திய அணியின் கேப்டனாக நியமிக்கப்பட்ட கதையை இதே திலீப் வெங்சர்க்கார் பகிர்ந்திருந்தார். அதில், "சச்சினின் பரிந்துரை, 2007 டி20 உலககோப்பை வெற்றியைத் தாண்டி தோனி கேப்டனாக தேர்வு செய்யப்பட அவரிடம் இருந்த தலைமை பண்பே காரணம். கிரிக்கெட் குறித்த புரிதல், அறிவு மற்றும் உடல் மொழி, அணியை முன்னணியில் இருந்து வழிநடத்தும் திறன் ஆகியவை தோனியிடம் இருந்து எங்களை கவர்ந்தன. தோனி ஆட்டத்தை அணுகும் விதத்தையும், மற்ற வீரர்களுடன் எப்படி நடந்துகொள்கிறார் என்பதை நாங்கள் கவனித்தோம். இதில் எங்களுக்கு பாசிட்டிவ் ரிசல்ட் கிடைத்தன. இதுவும், தோனி கேப்டனாக நியமிக்கப்பட முக்கிய காரணிகளாக அமைந்தன" எனக் கூறியிருந்ததுகுறிப்பிடத்தக்கது.

# அடுத்த 2 போட்டிகளிலும் ஹர்திக் பாண்டியா விளையாடுவது சந்தேகம்



**மும்பை : அக். 26,**
**கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சிகிச்சை பெற்று வரும் இந்திய அணி வீரர் ஹர்திக் பாண்டியா நடப்பு உலகக் கோப்பை தொடரின் அடுத்த 2 போட்டிகளில் விளையாடமாட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.**

13-ஆவது உலக கோப்பை கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இதுவரை 23 ஆட்டங்கள் முடிவடைந்துள்ளன. இதில் புள்ளிப் பட்டியலில் இந்திய அணி 5 வெற்றிகளுடன் முதலிடத்தில் உள்ளது. தென்னாப்பிரிக்கா, நியூசிலாந்து அணிகள் முறையே 2 மற்றும் 3-ஆவது இடத்தில் உள்ளன. வரும் அக்டோபர் 29-ம் தேதி லக்னோவில் நடைபெறும் போட்டியில் இங்கிலாந்துடன் இந்திய அணி பலப்பரீட்சை நடத்த இருக்கிறது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் ஆல்ரவுண்டர் ஹர்திக் பாண்டியா விளையாடுவார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், கணுக்காலில் காயம் ஏற்பட்டு சிகிச்சைபெற்று வரும் அவர் முழு உடல்தகுதி பெறாததால் அடுத்த 2 போட்டிகளில் விளையாடுவது சந்தேகம்தான் என தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பாக கிரிக்கெட் அகாடமி தரப்பில் "ஹர்திக் பாண்டியா சிகிச்சையில் இருக்கிறார். அவரது இடது கணுக்காலில் உள்ள வீக்கம் பெருமளவு குறைந்துவிட்டது. இருப்பினும் அவருக்கு இப்போதைக்கு ஓய்வுதேவை" என தெரிவித்துள்ளது.

மேலும், "பாண்டியாவுக்கு எலும்பு முறிவு எதுவும் ஏற்படவில்லை. பிசிசிஐ மருத்துவக்குழு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள விரும்புவதால் அடுத்த 2 போட்டிகளில் அவர் விளையாடமாட்டார். முழு உடல்தகுதி பெற்ற பின்னரே அணிக்குத் திரும்புவார்" என பிசிசிஐ தரப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இந்தியா அடுத்து 29-ம் தேதி இங்கிலாந்துடனும், நவ.2-ம் தேதி இலங்கையுடனும் விளையாட இருப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த அக்டோபர் 19-ம் தேதிபுனேயில்பங்களாதேஷ் அணிக்கு எதிராக நடைபெற்ற ஆட்டத்தில் பந்தை தடுக்க முயன்றபோது ஹர்திக் பாண்டியாவின் இடது கணுக்காலில் காயம் ஏற்பட்டது. தொடர்ந்து காயம் காரணமாக அவர் போட்டியிலிருந்து வெளியேறினார். இதனால் கடந்த அக்டோபர் 22-ம் தேதி தரம்சாலாவில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான போட்டியில் ஹர்திக் பாண்டியாவுக்கு ஓய்வு வழங்கப்பட்டது.

# 33 வருடங்களுக்குப் பிறகு என் இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது
## அமிதாப்புடன் நடிக்கும் ரஜினி நெகிழ்ச்சி



**மும்பை : அக். 26,**
**'தலைவர் 170' படத்திற்காக அமிதாப்பை நடிகர் ரஜினிகாந்த் சந்தித்துள்ளார். இந்த மகிழ்ச்சியை அவர் புகைப்படத்துடன் பகிர்ந்துள்ளார்.**

'ஜெயிலர்', 'லால் சலாம்' படங்களுக்குப் பிறகு நடிகர் ரஜினிகாந்த் தற்போது 'தலைவர் 170' படத்தில் பிஸியாக நடித்து வருகிறார். இந்த படத்தை 'ஜெய்பீம்' புகழ் ஞானவேல் இயக்குகிறார். இந்தப் படத்தில் ரஜினிகாந்த் உடன் அமிதாபச்சன், மஞ்சு வாரியார், துஷாரா விஜயன் உள்ளிட்டப் பல நடிகர்கள் நடிக்கின்றனர். இதன் முதல்கட்டப் படப்பிடிப்பு கேரளா, திருவனந்தபுரத்தில் நடைபெற்றது.

பின்பு, கன்னியாகுமரி, நெல்லை ஆகிய இடங்களில் நடந்தது. இந்த பகுதிகளில் ரசிகர்கள் ரஜினிகாந்திற்கு உற்சாக வரவேற்பு கொடுத்தனர். பல வருடங்களுக்கு பிறகு கன்னியாகுமரி வந்துள்ளதாக நடிகர் ரஜினிகாந்த் ரசிகர்களுடன் நெகிழ்ச்சியாக பகிர்ந்த வீடியோவும் இணையத்தில் வைரலானது. கிட்டத்தட்ட 33 வருடங்களுக்குப் பிறகு ரஜினியுடன் அமிதாப் இணைந்து நடிக்கிறார். தற்போது இந்த படத்தின் படபிடிப்பு மும்பையில் நடைபெற்று வருகிறது.

இதில் அமிதாப்பச்சன்-ரஜினிகாந்த் போர்ஷன் படமாக்கப்பட்டு வருகிறது. ரஜினி, அமிதாப்புடன் இணைந்து எடுத்தப் புகைப்படத்தை தனது சமூக வலைதளப் பக்கத்தில் பகிர்ந்து, '33 வருடங்களுக்குப் பிறகு என்னுடைய மெண்டர், நலன் விரும்பி ஸ்ரீ அமிதாப் பச்சனுடன் லைகா தயாரிப்பில் ஞானவேல் இயக்கத்தில் 'தலைவர் 170' படத்தில் நடிக்கிறேன். என் இதயம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது' எனப் பகிர்ந்துள்ளார்.

# இஸ்ரேல் தூதருடன் நடிகை கங்கனா திடீர் சந்திப்பு



**டெல்லி : அக். 26,**
**நடிகை கங்கனா ரவத் சமீபத்தில் டெல்லியில் இஸ்ரேல் தூதர் நவர் கிலோனை சந்தித்துள்ளார்.**

நடிகைகங்கனாரணாவத் டெல்லியில் இஸ்ரேல் தூதர் நவர் கிலோனை சந்தித்து இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையே நிலவும் நெருக்கடி குறித்து பேசியுள்ளார். இஸ்ரேலுக்கு ஆதரவை விரிவுபடுத்தும் வகையில் பல கருத்துக்களை கங்கனா பகிர்ந்து கொண்டார். மேலும், ஹமாஸை தற்போதைய காலத்தின் 'ராவணன்' என்று அழைத்தார். இந்த சந்திப்பு குறித்தானப் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பகிர்ந்துள்ள கங்கனா பகிர்ந்திருப்பதாவது, 'என் இதயம் இஸ்ரேலுக்கு செல்கிறது. இந்தியாவுக்கான இஸ்ரேலின் தூதருடன் எனது உரையாடல் இங்கே உள்ளது.

நான் இஸ்ரேலுக்கும் யூதர்களுக்கும் எனது ஆதரவைப் பற்றி தெரிவித்தேன். பயங்கரவாதிகளால் படுகொலைகள் தொடங்குவதற்கு முன்பு, நான் குரல் கொடுத்தேன். ஒரு இந்து தேசமாக, பல நூற்றாண்டுகளாக தொடரும் இந்து இனப்படுகொலைகள், யூதர்களை நாங்கள் அதிகம் அடையாளம் காண்கிறோம். இந்துக்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பாரதத்திற்கு நாங்கள் தகுதியானவர்கள் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம். யூதர்களும் ஒரு தேசத்திற்கு தகுதியானவர்கள்தான். எனக் கூறியுள்ளார்.

மேலும், 'இன்று முழு உலகமும், குறிப்பாக இஸ்ரேலும் இந்தியாவும் பயங்கரவாதத்திற்கு எதிரான போரில் ஈடுபட்டு வருகின்றன. நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நான் ராவண வதத்திற்காக டெல்லி சென்றபோது, இஸ்ரேல் தூதரகத்திற்கு வந்து இன்றைய நவீன ராவணனையும், ஹமாஸ் போன்ற பயங்கரவாதிகளையும் தோற்கடிக்கும் மக்களைச் சந்திக்க வேண்டும் என்று நினைத்தேன். சிறு குழந்தைகளும் பெண்களும் குறிவைக்கப்படும் விதம் நெஞ்சை பதற வைக்கிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான இந்தப் போரில் இஸ்ரேல் வெற்றி பெறும் என்ற முழு நம்பிக்கை எனக்கு உள்ளது. எனது வரவிருக்கும் படமான தேஜாஸ் மற்றும் இந்தியாவின் தன்னம்பிக்கை போர் விமானமான தேஜாஸ் பற்றி விவாதித்தேன்" எனவும் கூறியுள்ளார் கங்கனா.

வரலாறு சினிமா

# அர்ஜுன் மகள் ஐஸ்வர்யா – உமாபதி நிச்சயதார்த்தம்



**சென்னை : அக். 26,**
**நடிகை ஐஸ்வர்யா-நடிகர் உமாபதி திருமண நிச்சயதார்த்தம் எங்கே நடக்க இருக்கிறது என்பது குறித்தானத் தகவல் வெளியாகியுள்ளது.**

சிலமாதங்களுக்குமுன்னர் அர்ஜுன் மகள் ஐஸ்வர்யாவும், தம்பி ராமையாவின் மகன் உமாபதியும் காதலித்ததை தொடர்ந்து, இவர்களுக்குத் திருமணம் செய்து வைக்க இரு வீட்டு பெற்றோரும் முடிவு செய்துள்ளதாகத் தகவல் வெளியானது. இதை தொடர்ந்து, தம்பி ராமையாவும் இந்த தகவலை பேட்டி ஒன்றில் உறுதி செய்தார். நடிகர் அர்ஜுனின் தொகுத்துவழங்கிய 'சர்வைவர்' நிகழ்ச்சியில் உமாபதி போட்டியாளராகக் களமிறங்கினார்.

இந்த நிகழ்ச்சி மூலம்தான் உமாபதிக்கும் ஐஸ்வர்யாவுக்கும் இடையே பழக்கம் ஏற்பட்டு, நாளடைவில் அது காதலாக மாறியதாக கூறப்படுகிறது. நவம்பர் மாதம் திருமண நிச்சயம் நடக்க இருக்கிறது என முன்பு தம்பி ராமையா தெரிவித்திருந்த நிலையில், நடிகர் அர்ஜுன் சென்னையில் கட்டியுள்ள ஆஞ்சநேயர் கோயிலில் தம்பி ராமையா குடும்பமும், அர்ஜுனின் குடும்பமும் சந்தித்து இருவருக்கும் திருமணம் செய்து வைக்க முடிவு செய்துள்ளனர்.

திருமணம் தைமாதம் நடைபெற இருக்கிறது. நிச்சயதார்த்தம் குறித்தானத் தேதி இன்னும் அறிவிக்கப்படாத நிலையில் விசேஷத்திற்கான பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதற்காக ரசிகர்களும், பிரபலங்களும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# என் நீண்ட நாள் கனவு நிறைவேறியது
## அடுத்த பிசினஸை தொடங்கி நெகிழ்ந்த நயன்தாரா

**சென்னை : அக். 26,**
**தனது நீண்ட நாள் கனவு நிறைவேறியதாக நடிகை நயன்தாரா கூறியுள்ளார்.**

பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் நிறுவனமான '9ஸ்கின்' என்பதில் மலேசிய நிறுவனத்துடன் இணைந்து முதலீடு செய்தார் நடிகை நயன்தாரா. அதைத்தொடர்ந்து தற்போது 'Femi9' எனும் பெண்களுக்கான சானிட்டரி நாப்கின் நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார் நயன்தாரா. விஜயதசமி நாளில் இதைத் தொடங்கியதை தனது சமூகவலைதளப் பக்கத்தில் தனது கணவர் விக்னேஷ்சிவனுடன் இணைந்து அறிவித்துள்ளார்.

இதுகுறித்து தன்னுடைய இன்ஸ்டாகிராம்பக்கத்தில், 'இது வெறும் பிசினஸ் மட்டுமல்ல, என்னுடையநீண்டநாள்கனவு. பெண்களுக்காகபெண்களால் மிகுந்த அக்கறையுடனும் கவனத்துடனும் உருவாக்கப்பட்டது. இது ஒவ்வொரு பெண்ணின் வலிமை மற்றும் அழகுக்கான ஒரு அடையாளமாகும். பெண்களுக்கு அதிகாரமளிக்கும் இந்த முயற்சியை கொண்டாட என்னுடன் இணையுங்கள். ஒருவரையொருவர் ஆதரிப்போம், இணைந்து



உயர்வோம்' எனக்கூறியுள்ளார்.

இதற்கு முன்பு லிப்பாம் கம்பெனி, டீ பிசினஸ், உணவு பிசினஸ் என பலவற்றில் முதலீடுசெய்துள்ளநயன்தாரா தற்போதுநாப்கின்பிசினஸிலும் தடம் பதித்துள்ளதற்கு பலரும் தங்களது வாழ்த்துகளைத் தெரிவித்து வருகின்றனர்.

# வரலாறு உலகம்

## இஸ்ரேல் ஆக்கிரமிப்புக்கு எதிராக
# இஸ்லாமிய நாடுகள் ஒன்றிணைய வேண்டும் — ஈரான் அதிபர் அழைப்பு



**தெஹ்ரான் : அக். 26,**
**இஸ்ரேல்ஆக்கிரமிப்புக்கு எதிராக இஸ்லாமிய உலகம் ஒன்றிணையவேண்டும்என்று ஈரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சி தெரிவித்துள்ளார். இஸ்லாமிய நாடுகள் ஒற்றுமையாக இருந்திருந்தால் இஸ்ரேல் இன்று இதுபோல் காசாவில் குண்டுமழை பொழிந்திருக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

ஈரானுக்கான சவுதி தூதர் அப்துல்லா பின் சவுத் அல் அனாஸியை வரவேற்றுப் பேசிய அதிபர் இப்ரஹிம் ரைஸி, “ஒன்றிணைந்த முஸ்லிம் நாடுகளின் ஒருமித்த நிலைப்பாடு இன்று இஸ்ரேலிய ஆக்கிரமிப்பில் இருந்தும், அதன் மேற்கத்திய ஆதரவாளர்களிடமிருந்தும் அவர்களின் அடக்குமுறைகளிலும் முஸ்லிம்களைக் காப்பாற்றியிருக்கும். இனியாவது இஸ்லாமிய நாடுகளின் ஒற்றுமை ஓங்க வேண்டும்” என்றார்.

மத்தியக் கிழக்கு நாடுகளில் ஆதிக்கத்தைப் பெற ஈரானும், சவுதியும் மோதல் போக்கை கடந்த காலங்களில் கடைபிடித்து வந்தன. தற்போது பகையை மறந்து நட்புறவில் இரு நாடுகளும் ஈடுபடத் தொடங்கியுள்ளது சர்வதேச கவனத்தை ஈர்த்து வருகிறது. ஈரான் - சவுதி அரேபியா இடையே நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள்வளைகுடா நாடுகளின் பாதுகாப்பில் முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறாக நீண்ட காலமாக முறிந்திருந்த சவுதி - ஈரான் உறவு சீன தலையீட்டால் மீண்டும் துளிர்த்துள்ள நிலையில் ஈரானுக்கான புதிய சவுதி தூதர் நியமிக்கப்பட்டுள்ளார். அவரை வரவேற்கும்போது அதிபர் ரைஸிமேற்கூறியவாறு பேசினார். அவரது பேச்சு கவனம் பெற்றுள்ளது.

## இஸ்ரேல் - ஹமாஸ் போர்
# அப்பாவி மக்களின் பாதுகாப்பு மிகவும் முக்கியம்
## ஐநா வலியுறுத்தல்




**நியூயார்க் : அக். 26,**
**மத்திய கிழக்கில் நிலைமை நேரத்துக்கு நேரம் மோசமாகி வருவதாக கூறிய ஐநா பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ், போரில் பொதுமக்களின் பாதுகாப்பு முக்கியமானதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.**

கடந்த 7ம் தேதி இஸ்ரேல் மீது ஹமாஸ் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலைத் தொடர்ந்து தீவிரமடைந்து வரும் மோதல், அதனால் அதிகரித்துவரும்மனிதாபிமான நெருக்கடி ஆகியவைகள் குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டம் நியூயார்க்கில் உள்ள அதன் தலைமை அலுவலகத்தில் நேற்று முன்தினம்செவ்வாய்க்கிழமை கூடியது. அதில் பேசிய ஐ.நா. பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் கூறியதாவது: மத்திய கிழக்கில் நிலைமை ஒவ்வொரு மணிநேரத்துக்கும் மோசமடைந்து வருகிறது. பிரிவுகள் சமூகங்களைப் பிளவுபடுத்தி பதற்றத்தை தொடர்ந்து கொதிப்படையச் செய்கின்றன. இதனால் போரின்போது பொதுமக்களின் பாதுகாப்பு தொடங்கி கொள்கைகளில் உறுதியாக இருப்பது இன்றியமையாதது. இந்த மனிதத் தன்மையற்ற துன்பத்தை குறைப்பதற்கு, மனிதாபிமான உதவிகள் கொண்டு செல்வதை எளிதாக்க வேண்டும்.பிணையக்கைதிகள் விடுதலை செய்யும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஐ.நா. தீர்மானங்கள், சர்வதேச சட்டங்கள், முந்தைய ஒப்பந்தங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இஸ்ரேலியர்களின் பாதுகாப்புக்கான நியாயமான கோரிக்கைகள்நிறைவேற்றப்பட வேண்டும். பாலஸ்தீனத்தின் சுதந்திரமான அரசுக்கான தேவைஉணரப்படவேண்டும். மேலும்,குடிமக்களைக்கொலை செய்தல் மற்றும் கடத்துதல், குடியிருப்பு பகுதிகளில் நடத்தப்பட்ட ஹமாஸ்களின் ராக்கெட் குண்டு தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. அதேபோல் ஹமாஸ்களின் தாக்குதல் வெற்றிடத்தில் நடத்தப்பட வில்லை என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும். பாலஸ்தீனியர்கள் கடந்த 56 வருடங்களாக ஆக்கிரமிப்புகளின் அழுத்தத்துக்கு உள்ளாகி வருகிறார்கள். ஆனால் பாலஸ்தீனர்களின் இந்த மனக்குமுறல் ஹமாஸ்களின் தாக்குதலை நியாயப்படுத்த முடியாது. அதேபோல், இந்தத் தாக்குதல் காரணங்களுக்காக பாலஸ்தீன மக்களை தண்டிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ளமுடியாது” என்றுஐ.நா.பொதுச்செயலாளர் அந்தோனியோ குத்தேரஸ் தெரிவித்தார்.

இஸ்ரேல் மீது கடந்த 7-ம் தேதி ஹமாஸ் அமைப்பினர் திடீர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து இஸ்ரேல் பாதுகாப்புப் படை, காசா நகர் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. உணவு, குடிநீர், மின்சாரமின்றி காசா மக்கள் தவித்து வருகின்றனர். காசாவின் மிகப்பெரிய மருத்துவமனையான அல்-அஹ்லி மருத்துவமனை மீது 4 நாட்களுக்கு முன்னர் நடத்தப்பட்ட தாக்குதல் உலக நாடுகளை திரும்பிப் பார்க்க வைத்தது.

திங்கள்கிழமை காசா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் 140-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதாகவும், போர் தொடங்கியதில் இருந்து இஸ்ரேல்நடத்தியதாக்குதலில் 5,000 க்கும் மேற்பட்ட மக்கள் இறந்திருப்பதாகவும் ஹமாஸ் தெரிவித்திருக்கிறது. அதே வேளையில், ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,400-க்கும் மேற்பட்டோர் இறந்திருப்பதாக இஸ்ரேல் ராணுவம் தெரிவித்திருந்தது.

## பேச்சுவார்த்தையில் பிணைய கைதிகளை விடுவிக்க உடன்பாடு ஏற்பட்டதாக தகவல்
# இஸ்ரேல் ஹமாஸ் போர் குறைய வாய்ப்பு



**ஜெருசலேம் : அக். 26,**
**கடந்த அக்டோபர் மாதம் 7-ம் தேதி இஸ்ரேலுக்குள் ஊடுருவி ஹமாஸ் அமைப்பினர் இதுவரை 222 இஸ்ரேலிய யூதர்களை பிணை கைதிகளாக பிடித்து வைத்துள்ளதாக இஸ்ரேலிய ராணுவம் தெரிவித்துள்ளது. ஹமாஸ் உடனான போரை குறைக்க வேண்டும் என்றாலோ, பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்என்றாலோ, 222 பிணை கைதிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என இஸ்ரேல் ராணுவம் எச்சரிக்கை விடுத்தது.**

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பினருடன் தொடர்பில் இருக்க கூடிய நாடுகளான ஈரான், கத்தார், சவுதி அரேபியா உள்ளிட்ட நாடுகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரதிநிதிகளுடன் தொடர்பில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்நிலையில் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடந்துவருகிறது. காசாபகுதிக்கு நிவாரணப் பொருட்களை கொண்டு செல்ல முடியாத நிலைஉள்ளது. தொடர்ச்சியாக வான்வழி தாக்குதலை இஸ்ரேல் ராணுவம் நடத்தி வரும் நிலையில், தாக்குதலை குறைப்பதற்காகவும், மக்களுக்கு தேவையான நிவாரண உதவிகளை வழங்குவதற்காகவும் முதற்கட்டமாக பிணைய கைதிகளை வெளியிட வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது.

இந்த நிலையில் குவைத்தின் பிரதமர் ஹமாசின் அரசியல் பிரிவுதலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இதனை தொடர்ந்து பிணைய கைதிகளில் வயதானவர்கள் 2 பேரும், அமெரிக்கர்கள் 2 பேரும் விடுவிக்கப்பட்டனர். இது போன்று பெண்கள், குழந்தைகள், முதியவர்களான ஒரு 50 பேரை முதற்கட்டமாக விடுவிக்க வேண்டும் என ஹமாஸ் அமைப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அந்த பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் அடைந்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.பிணைய கைதிகளை தொடர்ச்சியாக விடுவிக்கும்படியான போர் சூழல் குறையவாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது.

# உயர்ந்த பதக்கங்களை வென்ற இந்தியர்கள்
## அமெரிக்க அதிபர் பைடன் வழங்கினார்



**அமெரிக்கா : அக். 26,**
**1973 கான்பூர் இந்திய தொழில்நுட்ப கழகத்தில் பவுதிகத்தில் முதுநிலை பட்டம் பெற்றவர் 63 வயதான அசோக் கேட்கில். இவர் அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா பல்கலைகழகத்தில் பவுதிகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார்.**

1993ல் இந்தியாவில் ஏற்பட்ட காலரா தொற்றுநோய் பாதிப்பை கண்ட கேட்கில், புற ஊதா கதிர் மூலமாக குடிநீரை சுத்திகரிப்பு செய்யும் சாதனத்தை கண்டுபிடித்தார். வளர்ந்து வரும் நாடுகளில் தூய்மையான குடிநீர் கிடைப்பதற்காக பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருபவர், கேட்கில்.

இவரை போன்ற மற்றொரு ஆராய்ச்சியாளர் அமெரிக்காவின் புகழ் பெற்ற எம்.ஐ.டி. பல்கலைகழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர் 66 வயதான டாக்டர். சுப்ரா சுரேஷ். பொறியியல் படிப்பிற்கான பிரவுன் பல்கலைகழகத்தில் பேராசிரியராக உள்ளார்.

இந்திய வம்சாவளியை சேர்ந்த இருவருக்கும் அமெரிக்காவில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்திற்கான உயர்ந்த விருதான தேசிய பதக்கம் கிடைத்துள்ளது. மனிதகுலத்திற்கு இன்றியமையாத அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மேம்பாடுகளில் இவர்கள் காட்டிய அர்ப்பணிப்பிற்காக இந்த பதக்கங்கள் வழங்கப்படுவதாக வெள்ளை மாளிகை அறிவித்தது. இருவருக்கும் இந்த பதக்கங்களை அமெரிக்க அதிபர் ஜோ பைடன் வழங்கினார்.

# இஸ்ரேல் – ஹமாஸ் மோதலை முடிவுக்கு கொண்டுவர வேண்டும்
# ஜோர்டான் மன்னரிடம் மோடி வலியுறுத்தல்



**புதுடெல்லி : அக். 26,**
**இஸ்ரேல் ராணுவம் - ஹமாஸ் தீவிரவாதிகள் இடையிலான போர் தீவிரமடைந்து வரும் நிலையில், ஜோர்டான் மன்னரை பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்.**

இந்த மோதலை விரைவில் முடிவுக்கு கொண்டுவர சர்வதேச அளவில் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார். இதற்கிடையே, இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை பிரான்ஸ் அதிபர் மேக்ரான் சந்தித்து பேசினார். இஸ்ரேல் எல்லையில் நடத்தி வரும் தாக்குதலை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று ஹிஸ்புல்லா தீவிரவாத அமைப்புக்கு அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாலஸ்தீனத்தின் காசா நகரில் இருந்து செயல்படும் ஹமாஸ் தீவிரவாதிகள், இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்துதாக்குதல்நடத்தியதில் ஏராளமானோர் உயிரிழந்தனர். இதற்கு பதிலடியாக இஸ்ரேல் போரை அறிவித்து காசா பகுதிக்குள்விமானங்கள்மூலம் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில், ஏராளமான கட்டிடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். பலலட்சம் பேர் அகதிகளாக பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இந்தநிலையில்,ஜோர்டான் மன்னர் 2-ம் அப்துல்லாவை பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு உரையாடினார். அப்போது, தீவிரவாதம், வன்முறை தாக்குதல்கள் குறித்தவருத்தம்,வேதனையை பிரதமர் மோடி பகிர்ந்து கொண்டார். காசாவில் மோசமடைந்து வரும் சூழலை தடுப்பது குறித்து இரு தலைவர்களும் விரிவாக ஆலோசனைநடத்தினர்.போரை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கும், தாக்குதல்களில் இருந்து அப்பாவி மக்கள், மருத்துவமனைகளை பாதுகாப்பதற்கும் உத்தரவாதம் அளிக்கும் விதமாக சர்வதேச முயற்சிகளை முடுக்கிவிடுவதன் அவசியம் குறித்தும் அவர்கள் தீவிரமாக ஆலோசனை நடத்தினர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிக அளவில் மருத்துவ, நிவாரண உதவிகள் சென்றடைவதை உறுதிசெய்ய நடவடிக்கை எடுப்பது குறித்தும் பிரதமர் மோடி அப்போது வலியுறுத்தினார்.

# ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அடுத்த கட்ட போருக்கு தயாராகிறோம் : இஸ்ரேல் ராணுவம் அறிவிப்பு



**டெல் அவிவ் : அக். 26,**
**பாலஸ்தீனத்தின் காசா பகுதி ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக அடுத்த கட்ட போருக்கு தயாராகிறோம்என்றுஇஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது.**

இஸ்ரேல் ராணுவம், ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு இடையே நேற்று 19-வது நாளாக போர் நீடித்தது. பாலஸ்தீனத்தின் காசா பகுதியில்சுமார் 400இடங்களை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள்நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை தாக்குதல் நடத்தின. இதில் ஒரே நாளில் 700-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக பாலஸ்தீன சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது. காசா பகுதியில் ஒட்டுமொத்த உயிரிழப்பு 5,000-ஐ தாண்டியுள்ளது.

இதனிடையே ஹமாஸ் தீவிரவாதிகளுக்கு ஆதரவாக லெபனானை சேர்ந்த ஹிஸ்புல்லா தீவிரவாதிகள் இஸ்ரேலின் வடக்கு பகுதி எல்லையை குறிவைத்து தொடர்ந்து ஏவுகணை தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். அந்த எல்லைப் பகுதிகளிலும் சண்டை தீவிரமடைந்துள்ளது.

இந்த சூழலில் இஸ்ரேல் ராணுவ செய்தித் தொடர்பாளர் டேனியல் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை கூறியதாவது:பாலஸ்தீனத்தின் காசா பகுதிகளில் ஹமாஸ் தீவிரவாதிகளின் இருப்பிடங்களை குறிவைத்து வான்வழி தாக்குதல்களை நடத்தி வருகிறோம். எங்களை பொறுத்தவரை ஹமாஸ் தீவிரவாதிகளை கூண்டோடு அழிக்க வேண்டும். காசா பகுதி ஆட்சி நிர்வாகத்தில் இருந்து அவர்களை முழுமையாக நீக்க வேண்டும். அடுத்த கட்ட போருக்குதயாராகிவருகிறோம். இதன்படி காசாவில் தரைவழி தாக்குதல் நடத்த தயார் நிலையில் இருக்கிறோம் என்று டேனியல் தெரிவித்தார்.

கடந்த 7-ம் தேதி இஸ்ரேலின் தெற்குப்பகுதியில் தாக்குதல் நடத்திய ஹமாஸ் தீவிரவாதிகள், சுமார் 220 பேரை பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்றனர். இதில் அமெரிக்காவை சேர்ந்த தாய், மகள் கடந்த 22-ம் தேதி விடுதலை செய்யப்பட்டனர். இதைத் தொடர்ந்து இஸ்ரேலை சேர்ந்த யாச்சிவெத் (85), நூரித் (79) ஆகிய இரு பெண்களை ஹமாஸ் தீவிரவாதிகள் திங்கள்கிழமை விடுதலை செய்தனர். செஞ்சிலுவை சங்கத்திடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இதர பிணைக்கைதிகளை மீட்க அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஹமாஸ் தீவிரவாத அமைப்பின் மூத்த தலைவர்களுடன் ரகசிய பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன.


இதனிடையே காசா பகுதி மக்களின் உதவியை இஸ்ரேல் ராணுவம் கோரியிருக்கிறது. ‘‘பிணைக் கைதிகள் குறித்து காசா பகுதிமக்கள் தொலைபேசி, குறிப்பிட்ட சமூக வலைதள கணக்குகள் மூலம் தகவல் தெரிவிக்கலாம். அவர்களின் விவரங்கள் ரகசியமாக வைக்கப்படும். அவர்களின் பாதுகாப்பு உறுதி செய்யப்படும். அவர்களுக்கு தேவையான நிதியுதவி வழங்கப்படும்” என்று இஸ்ரேல் ராணுவம் அறிவித்துள்ளது. இதுதொடர்பாக காசா பகுதியில் இஸ்ரேல் போர் விமானங்கள் துண்டு பிரசுரங்களை வீசியுள்ளன.

இஸ்ரேலுக்கு ஆதரவாக அமெரிக்க கடற்படை சார்பில் 2 அதிவீன போர்க்கப்பல்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் முகாமிட்டுள்ளன. ஈரான் ஆதரவு பெற்ற தீவிரவாத குழுக்கள் இஸ்ரேலை குறிவைத்து வீசும் ஏவுகணைகளை அமெரிக்க போர்க்கப்பல்கள் நடுவானில் அழித்து வருகின்றன.

இதுதொடர்பாக அமெரிக்க ராணுவ தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில், “இஸ்ரேல் ராணுவம் - ஹமாஸ் தீவிரவாதிகளுக்குஇடையிலான போரில்3-ம்தரப்புதலையிட்டால் நாங்கள் ராணுவ ரீதியாக நடவடிக்கை எடுப்போம்” என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

இந்த சூழலில் ஈரானின் நட்பு நாடான சீனாவின் 6 போர்க்கப்பல்கள்மத்தியதரைக் கடல் பகுதிக்கு அனுப்பப்பட்டு உள்ளன. இதுகுறித்து சீன வெளியுறவுத் துறை அளித்துள்ள விளக்கத்தில், “வழக்கமான ரோந்து பணியில் ஈடுபட்டிருக்கிறோம். இஸ்ரேல் ராணுவம் - ஹமாஸ் அமைப்புக்கு இடையிலான போருக்கும் எங்களது போர்க் கப்பல்களுக்கும் தொடர்பில்லை” என கூறப்பட்டுள்ளது. எனினும் அமெரிக்காவுக்கு சவால் விடும் வகையில்சீனபோர்க்கப்பல்கள் மத்திய தரைக்கடல் பகுதியில் நிலைநிறுத்தப் பட்டிருப்பதாக பாதுகாப்புத் துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# ஐஸ்லாந்து நாட்டில் பெண்கள் வேலைநிறுத்தம் ஆதரவு தெரிவித்து பிரதமர் பணி புறக்கணிப்பு



**ஐஸ்லாந்து : அக். 26,**
**ஐஸ்லாந்து நாட்டில் சம வேலைக்குசமஊதியம்,பாலின சமத்துவம் உள்ளிட்டவற்றை வலியுறுத்தி90சதவீதம்பெண் தொழிலாளர்கள் ஒரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வந்தநிலையில்,அவர்களுக்கு ஆதரவாக அந்நாட்டு பிரதமர் காத்ரின், நேற்று ஒரு நாள் பணிகளை புறக்கணித்தார்.**

உலகின் மிகவும் வளர்ந்த நாடுகளில் ஒன்றாக கருதப்படும் ஐஸ்லாந்து நாட்டில் பெரும்பாலான நிறுவனங்களில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சம வேலைக்கு சம ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இருப்பினும் நாடு முழுவதும் பல்வேறு தொழில்களில் ஆண்களின் வருமானத்தை விட 20 சதவீதம் குறைவாகவே பெண்களுக்கு ஊதியம் வழங்கப்படுவதாககுற்றச்சாட்டு இருந்து வருகிறது.

மேலும் குழந்தைகள் பாதுகாப்பு, மருத்துவம் உள்ளிட்ட சேவைகளில் பெண்கள் அதிக அளவில் பணியில் ஈடுபட்டிருந்தாலும், போதிய அளவிலான ஊதியம் இல்லை என குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டு வருகிறது.

இதனை கண்டிக்கும் விதமாக நேற்று நாடு முழுவதும் அனைத்து பணிகளில்இருந்தும்பெண்கள் ஒரு நாள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இதையடுத்து 90 சதவீதம் பெண் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு, வீடுகளில் தங்கினர்.

இவர்களின் இந்த கோரிக்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அந்நாட்டு பிரதமர் கேத்தரின் ஜக்கோப்ஸ்டாட்டிர், நேற்று ஒரு நாள் தனது பணிகளை புறக்கணிப்பதாக அறிவித்தார். அவர் நேற்று பிரதமர் அலுவலகத்திற்கு வராமல் வீட்டிலேயே தங்கினார்.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு இந்த போராட்டம் துவங்கிய போதும் தொடர்ந்து பாலின சமத்துவத்திற்காக போராட வேண்டி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். தற்போதைய சூழலில் முழுமையான பாலின சமத்துவம் ஏற்பட 300 ஆண்டுகளுக்கும் மேல் ஆகலாம் என அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

சுமார் 4 லட்சம் மக்கள் தொகை கொண்ட ஐஸ்லாந்து நாட்டில் இந்த போராட்டத்தில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பெண்கள் ஈடுபட்டிருப்பதால் அங்கு தொழில்கள் பெருமளவு முடங்கியுள்ளது. மருத்துவமனைகள், அவசர கால நோயாளிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என அறிவித்துள்ளன.

# இரவு வானில் ஒரு கண்கொள்ளா காட்சி பறவைகளாக மாறிய டிரோன்கள்



**நியூயார்க் : அக். 26,**
**அமெரிக்க மாநிலம் நியூயார்க்நகரில்மன்ஹாட்டன் பகுதியில் 843 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது புகழ் பெற்ற சென்ட்ரல் பார்க். நியூயார்க் நகரின் ஐந்தாவது மிகபெரியபூங்கா இதுஎன்பது குறிப்பிடத்தக்கது.**

இங்குள்ள ஏரிக்கு அருகே ரிஃப்ட் எனும் டச்சு ஸ்டூடியோ ஒன்றினால் “பிரான்சைஸ் ஃப்ரீடம்” எனும் பெயரில் நடத்தப்பட்ட ஒரு கண்கவர் நிகழ்வு உலகமெங்கும் பேசுபொருளாகி வருகிறது.

இந்த நிகழ்ச்சியில், இரவு வானில் 1000 டிரோன்கள் ஒரே நேரத்தில் பறக்க விடப்பட்டன. அந்த டிரோன்களை இயக்குபவர்களால் வானில் பறந்த அவை, பல கலை வடிவங்களை காண்பிக்கும்படி பறக்க விடப்பட்டது.

10 நிமிட இடைவெளியில் ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் பறந்த இவை, இது போல் 3 முறை பல வெவ்வேறு விதமான வடிவங்களை வானில் வெளிப்படுத்தின. ஒவ்வொரு டிரோனில் இருந்தும் வரும் சிறு ஒளி ஒட்டு மொத்தமாக 1000 டிரோன்களில் இருந்து பெரும் நட்சத்திர கூட்டம் போன்று வானில் தெரிந்தது.

இந்த டிரோன்கள், வானில் பல வடிவங்களில் பறவை கூட்டம் போல் நேர்த்தியாக பறக்கவிடப்பட்டதுகாண்போரை மிகவும் பரவசப்படுத்தியது. “மனிதன், இயற்கை மற்றும் தொழில்நுட்பம் ஆகிய மூன்றிற்கும் இடையே உள்ள தொடர்பைஆய்வுசெய்யும்ஒரு முயற்சி இது. கவித்துவமான இந்த நிகழ்வு, மனிதர்களாக நாம் ஒரே சமூகமாக சட்டதிட்டங்களுக்குகட்டுப்பட்டு வாழ்வதை உணர்த்துகிறது” என தங்கள் அதிகாரபூர்வ வலைதளத்தில் இந்த நிகழ்ச்சி குறித்து ட்ரிஃப்ட் அமைப்பு தெரிவித்துள்ளது.

இரவு நேர பறவைகள், பறக்கின்ற வழித்தடங்களுக்கு இந்த நிகழ்ச்சியினால் எந்த தடையும் ஏற்படாது என விலங்குகள்மற்றும்பறவைகள் நல அமைப்புகளுடன் கலந்து ஆலோசித்தபிறகேஇதுஏற்பாடு செய்யப்பட்டதாக டிரிஃப்ட் அமைப்பினர் தெரிவித்தனர். ஒரே சமயத்தில் இத்தனை டிரோன்கள் வானில் பறக்கும் நிகழ்வு,சமூகவலைதளங்களில் பரவி வருகிறது.

# கனடாவில் துப்பாக்கி சூடு 2 குழந்தை உள்பட 5 பேர் பலி



**ஒட்டாவா : அக். 26,**
**கனடாவில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் 2 குழந்தை உள்பட 5 பேர் பரிதாபமாக இறந்தனர்.**

கனடாவின் வடக்கே ஒன்டாரியோ நகரில் திடீரென துப்பாக்கிசூடுசம்பவம்நடந்தது. இதில் 2 குழந்தை உள்பட 5 பேர் பலியானதாக அந்நாட்டு ஊடகம் தெரிவிக்கின்றது. இதுபற்றிசால்ட்மேரிபோலீசார் கூறுகையில், ‘துப்பாக்கி சூடு சம்பவம் குறித்து வந்த தகவலின்பேரில்விரைந்தோம். தான்கிரெட் தெருவில் 41 வயது மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்து கிடந்தார். தொடர்ந்து 10 நிமிடங்களில் மற்றொரு தொலைபேசி அழைப்பு வந்தது. உடனே சென்று பார்த்தபோது, துப்பாக்கி சூட்டிற்கான காயங்களுடன்45மதிக்கத்தக்க ஒருவர் உயிரிழந்து கிடந்தார்.

மேலும், 6 மற்றும் 12 வயதுடைய 2 பேரின் உடல்களும் காணப்பட்டன. அவர்களும் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்துள்ளனர். பின்னர், 44 வயது கொண்ட மற்றொரு நபரின் உயிரற்ற உடலும் கைப்பற்றப்பட்டது. அவர் துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்திருப்பது போன்று தெரிகிறது’ என்று தெரிவித்தனர். இந்த மரணங்கள் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என போலீசார் கூறினர். தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. கடந்த மாதம் ஒட்டாவாவில் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நடந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் 2 பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# 16 லட்சம் அரசு ஊழியர்களுக்கு 4 சதவீதம் அகவிலைப்படி உயர்வு

# எரிகற்களை ஆய்வு செய்த மாணவருக்கு நாசா சான்றிதழ் வழங்கி கௌரவிப்பு





# பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க ஜனவரி 7 தேர்வு ஆசிரியர் வாரியம் அறிவிப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 26.10.2023 | varalaruu.com | பக்கம்:6 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

26.10.2023 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கணேஷ் சங்கர் வித்யார்த்தி , இந்திய இதழியலாளர், செயற்பாட்டாளர் (பி.1890) (இ.1931)



இராம் பிரகாஷ் குப்தா , இந்திய அரசியல்வாதி, உத்தரபிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் (பி.1923) (இ.2004)



சாரெகொப்பா பங்காரப்பா , கருநாடக மாநில முன்னாள் முதலமைச்சர் (பி.1932) (இ.2011)



## இன்றைய நினைவு நாள்

மிர்துலா சாராபாய் , இந்திய விடுதலைப் போராட்ட செயற்பாட்டாளர் (பி.1911) (இ.1974)



பி. எஸ். மணிசுந்தரம் , இந்தியக் கல்வியாளர் (பி.1927) (இ.2013)



தங்கேஸ்வரி கதிராமன் , இலங்கை வரலாற்றாளர், எழுத்தாளர், அரசியல்வாதி (பி.1952) (இ.2019)



நானம்மாள் , இந்திய யோகக்கலைப் பயிற்சியாளர் (பி.1920) (இ.2019)

